Regd. No. 2975

ஸ்ரீ:

# ஸ்ரீ ராமாநுஜன் - 347

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

# SRI RAMANUJAN

Editor:
*Mahamahimopadhyaya*
P. B. ANNANGARACHARYA, KANCHIPURAM-631503.

வருஷச் சந்தா 10 ரூ. ஜீவியச் சந்தா ரூ. 25

---

பேரருளாளன் பெருந்தேவித்தாயார்
திருவடிகளே சரணம்.




ஆழ்வார்எம்பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்.

---

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

பிங்களஸூ 10-5-1977

# ஸ்ரீ ராமாநுஜன்—547



ஆசிரியர்:
மஹாமஹிமோபாத்யாய ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்

| | | |
|---|---|---|
| ஸம்புடம் 29 | பிங்களஹு சித்திரை மாதம் 10—5—1977 | ஸஞ்சிகை 11 |


## பிங்களவத்ஸர மங்கள ஸங்கதிகள்

### ஸ்ரீபெரும்பூதூர் மஹோத்ஸவ வைபவம்.

ஏறக்குறைய ஒரு வருஷகாலமாக நாம் பிங்களவத்ஸர ப்ரஸ்தாவம் செய்துவந்தாலும் புனிதமான அந்த ஸம்வத்ஸரம் ஸமீபகாலத்தில்தான் பிறந்து நடந்துவருகிறது. சித்திரையில் செய்ய திருவாதிரை ஆங்காங்குப் பிரபலமாகக் கொண்டாடப்பட்டதறிந்து மகிழ்கிறோம். ஸ்ரீஸ்வாமியின் திருவவதாரஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரில் மிகமிக அற்புதமாகக் கொண்டாடப்பட்டதென்பதை ஸமக்ஷ அநுபவத்தினாலறிந்து அறிவிக்கிறோம். "அற்புதமாகக் கொண்டாடப்பட்டது' என்றெழுதிவிடுவதில் அர்த்தமில்லையன்றோ? சிறிது விவரிக்கிறேன், உத்ஸவங்கள் காலகாலத்தில் நடைபெறும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததென்பது ..தல் விஷயம். இயல்கோஷ்டியில் நூறு ஸ்வாமிகளும் வேதபாராயண ..காஷ்டியில் நாற்பது ஸ்வாமிகளும் ஸேவை ஸாதித்தனரென்பது அடுத்த ..ிஷயம். ஆழ்வார் திருநகரி வானமாமலை திருக்குறுங்குடி ஸ்ரீவில்லிபுத்தூர் ..துரை கோயில் திருவாலி திருநகரி திருநாங்கூர் திருவிந்தளூர் ராஜமன்னார் ..ன்னிதி திருவல்லிக்கேணி திருமலை முதலிய திவ்யதேசங்களிலிருந்து விலக்ஷணர்களான ஸ்வாமிகள் ஸேவை ஸாதித்தது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. ஸாதாரண ஸேவார்த்திகளாக வந்திருந்த ஸ்வாமிகள் பல நூற்றுக்கணக்கானவர். ஆந்திரப் பிரதேசத்தில், நெல்லூர் ஜில்லா கிருஷ்ணா ஜில்லா கோதாவரி ஜில்லா விசாகபட்டணம் ஜில்லா ஹைதராபாத் முதலான பல விடங்களிலிருந்து வந்திருந்த பக்த பாகவதோத்தமர்களும், ஹிந்துஸ்தானி மஹாராஷ்ட்ர தேசத்தவர்களும் எண்ணிறந்தவர்கள். இவர்களுக்கெல்லாம் வெகு ஸௌகரிய

மாக போஜன வஸதிகள் செய்விக்கப்பட்டிருந்தது மிகவும் அதிசயிக்கத்தக்கது. ஸ்ரீயதிராஜ ஜீயர் மடம், ஸ்ரீ எம்பார் ஜீயர் மடம், வானமாமலை மடம், கூரத்தாழ்வான் ஸந்நிதி போன்ற இடங்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸ்வாமிகளுக்கு பரத்வாஜாச்ரமமாகவே யிருந்தன. வைச்யர்களுக்கும் பாகவதர்களுக்கும் மற்றையோர்களுக்கும் நியதஸ்தலங்களில் சிறிதும் குறையில்லாமல் உணவளிக்கப்பட்டது.

தினப்படியாக பிற்பகலில் 3-30 மணிமுதல் 5-30 மணிவரையில் ஸந்நிதிக்குள் காயத்ரீ மண்டபத்தில் வித்வான்களின் உபய வேதாந்தார்த்தோபந்யாஸங்கள்—விசேஷித்து ஸ்ரீபாஷ்யார்த்தோபந்யாஸங்கள் மிகப் பெரிய ஸதஸ்ஸாக நடைபெற்று வந்தன. (முக்கியமான குறிக்கோள்.) ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், வேதார்த்தஸங்க்ரஹம் ஆகிய க்ரந்தங்களைப் பல வேளைகளில் ஸ்வாமி ஸந்நிதி மஹாமண்டபத்தில் ஆறு வித்வான்கள் ஸேவித்துப் பூர்த்திசெய்தனர். வித்வான்களுக்கும் அத்யாபக-வேதபாராயண ஸ்வாமிகளுக்கும் அளிக்கப்பட்ட ஸம்பாவனைத் தொகை பதினொன்றாயிரம் ரூபாவென்று நேரிட அறிந்து மகிழ்ந்தோம். நெடுநாளாகவே எம்பெருமானார் கைங்கரியங்களில் பாரம்பரையாக ஈடுபாடு கொண்டுள்ள பக்த பாகவதோத்தமர்கள் 'பகவத்ராமாநுஜ மஹோத்ஸவ கைங்கர்யக் கமிட்டி' யொன்று ஏற்படுத்தி அதன்மூலமாகக் குறையற நடந்தேறியது குறிப்பிடத் தக்கது. ஒவ்வொருவேளையும் உபயங்களின் செலவு ஏறக்குறைய ஆயிரம் ரூபாயிருக்கும். புஷ்கரிணியிலும் ஏரியிலும், மற்றும் ஜலாசயங்களிலும் தீர்த்த ஸம்ருத்தி புஷ்கலமாயிருந்தபடியால் ஜலகஷ்டம் என்பதற்கு ப்ரஸக்தியேயில்லை.

இப்போது ஆஸ்தான மலங்கரிக்கநின்ற ஸ்ரீமத்பரமஹம்ஸ. யதிராஜ ஜீயர் ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் தேவஸ்தான கைங்கரியங்களில் பரிபூர்த்தியாகப் ப்ராவண்யங் கொண்டிருந்தவராதலால் அந்த ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில் நடந்த இம்மஹோத்ஸவத்திற்கு விளைந்த சிறப்பு வியக்கத்தக்கதன்று. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. திருமலை திருப்பதி. சிறியகேள்வி ஜீயர் ஸ்வாமி சாத்துமுறையன்று எழுந்தருளியிருந்து கோஷ்டியை அலங்கரித்தது ஸகல ஸ்வாமிகளுக்கும் ஸத்கார மளித்தருளினதும் பாராட்டத்தக்கது. ஸ்ரீமத்பரமஹம்ஸ எம்பார்ஜீயர் ஸ்வாமி சிலமாதங்களாகவே திருமேனி பாங்கில்லாமல் எழுந்தருளியிருப்பதால் ஒரு வேளை கூட கோஷ்டியை அலங்கரிக்கப்பெறாமலிருந்தது சோசநீயம். ஸ்வாமியின் திருமேனி விரைவில் பாங்காக வேணும்.

உத்ஸவ வைபவங்களுக்கெல்லாம் கண்ணெச்சில்பட்டாற்போலே இடையில் நேர்ந்த ஒரு சோக ஸம்பவத்தையும் தெரிவிக்கவேண்டியதாகிறது. ஸ்ரீபெரும்பூதூருக்குத் திலகமாக எழுந்தருளியிருந்த வித்வத்ஸார்வபௌமரான ஸ்ரீமதாஸூரி மஹாஸ்வாமியின் கநிஷ்ட திருக்குமாரர் (ஐம்பதுக்குட்பட்ட திருநக்ஷத்ரமுள்ளவர்) வார்த்தையாடிக்கொண்டிருந்தே அகஸ்மாத்தாகத் திருநாட்டுக் கெழுந்தருளினார். ஹ்ருதய ரோகக் கோளாறு எனத் தெரிகிறது. சாஸ்த்ராதிகாரியாய் உபயவேதாந்தப்ரவீணராயிருந்தவர் திடீரென்று மறைந்தது ஸ்ரீவைஷ்ணவ மண்டலிக்குப் பெருத்த குறையேயாகும். ... ... ...

# வையங்கண்ட வைகாசித் திருநாள்

காஞ்சிபுரம் ஸ்ரீவரதராஜப் பெருமாள் வருடந்தோறும் வைகாசி மாதத்தில் கண்டருளும் ப்ரஹ்மோத்ஸவத்திற்கு வையங்கண்ட வைகாசித் திருநாள் என்று ப்ரஸித்தி. உண்மையில், வையமெல்லாம் திரண்டுவந்து ஸேவிக்கும் ப்ரஹ்மோத்ஸவம் காஞ்சிபுரம் உத்ஸவம் ஒன்றேயாகும். வைகாசி மாதம் சித்திரை நக்ஷத்திரத்தில் தொடங்கித் திருவோண நக்ஷத்திரத்தில் அவப்ருதங்கண்டருளும் மஹோத்ஸவம் இது. இவ்வாண்டில் இம் மஹோத்ஸவம் நடைபெறுவதற்குத் தடை ஏற்பட்டிருக்கிறதென்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளவேண்டியதாகிறது. ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் பெரிய கோபுரம் ஜீர்ணோத்தாரணம் செய்யப்படும் வியாஜமாக ஆறேழு மாதகாலமாய் பஞ்சபர்வோத்ஸவங்கள் நைமித்திகோத்ஸவங்கள் ஆகிய எல்லாவுத்ஸவங்களுமே திருவீதிப் புறப்பாடின்றி ஸந்நிதிக்குள்ளேயே நடத்தப்பட்டுவருகின்றன வென்பது உலகமறிந்தது. ப்ரக்ருத ப்ரஹ்மோத்ஸவம் அப்படி உட்பிராகாரத்தில் நடத்தக் கூடியதன்றாகையால் இப்போது அறவே நிறுத்தப்பட்டு விட்டதாக தேவஸ்தான நிர்வாக அதிகாரிகள் ஸர்க்காருக்கும் போலீஸ் இலாகாவுக்கும் தெரிவித்து விட்டதாக அறிகிறோம்.

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பு லௌகிக காரண விசேஷத்தினால் இந்த ப்ரஹ்மோத்ஸவம் ஒரு வருஷம் அறவே நின்றும், மற்றொரு வருஷம் வெளிப் பிராகார வீதிகளில் நடந்துமிருக்கிறது. இவ்வாண்டிலும் கோபுர ஜீர்ணோத்தாரணம் முடிவுபெற்று ஸம்ப்ரோக்ஷணமான பின்பு அதற்கு அங்கமாக நடைபெறுமென்று வதந்தியுள்ளது. பேரருளாளன் பேரருள் பொலிக. ... ... •

ஸ்ரீ:

# ஸ்ரீராமாயணத்தில் 'ராமாநுஜ' திருநாமம் வருமிடங்கள்

நியாயவேதாந்தவித்வான். தி. அ. அக்காரக்கனி ஸம்பத்குமாராசாரியர். M A.

1 இமாமவஸ்த்தாமாபந்நோ நேஹ பச்யாமி ராகவம் ।
ஹா ராம! ராமாநுஜ! ஹா ஹா வைதேஹி தபஸ்விநி! ॥ (அயோ. 59-31)

2 *ஸ து ராமாநுஜச் சாபி சத்ருக்னஸஹிதஸ் ததா ।
ப்ரதஸ்த்தே பாதோ யதர கௌஸல்யாயா நிவேசநம். ॥ (அயோ. 75-8)

3 *ததஸ் து ராமாநுஜ ராமவாநரா: ப்ரக்ருஹ்ய சஸ்த்ராண்யுதிதார்க்க தேஜஸ: ।
புரீம் ஸுரேசாத்மஜவீர்யபாலிதாம் வதாய சத்ரோ: புநராகதா: ஸஹ. ॥ (கி 13-30)

4 *அவஷ்டப்ய ச திஷ்டந்தம் ததர்ச தநுருத்தமம் ।
ராமம் ராமாநுஜஞ் சைவ பர்த்துச் சைவாநுஜம் சுபம். ॥ (கி. 19-25)

5 *ஸ காமிநம் தீநமதீநஸத்வம் சோகாபிபந்நம் ஸமுதீர்ணகோபம் ।
நரேந்த்ரஸூநு: நரதேவபுத்ரம் ராமாநுஜ: பூர்வஜமித்யுவாச. ॥ (கி. 31-1)

6 *யதோக்தகாரீ வசநமுத்தரஞ்சைவ ஸோத்தரம் ।
ப்ருஹஸ்பதிஸமோ புத்த்யா மத்வா ராமாநுஜஸ் ததா ॥ (கி. 31-12)

7 ஏஷ ராமாநுஜ: ப்ராப்த: த்வத்ஸகாசமரிந்தம: ।
ப்ராதுர் வ்யஸநஸந்தப்த: த்வாரி திஷ்டதி லக்ஷ்மண: ॥ (கி. 31-33)

8 •ந ராம***ராமாநு***ஜசாஸநம் த்வயா
கபீந்த்ர யுக்தம் மநஸாப்ய போஹிதும் I
மநோ ஹி தே ஜ்ஞாஸ்யதி மாநுஷம் பலம்
ஸராகவஸ்யாஸ்ய ஸுரேந்த்ர வர்ச்சஸ: II (கி. 32-22)

9 •நூநம் ஸ காலோ ம்ருகரூபதாரீ மாமல்பபாக்யாம் லுலுபே ததாநீம் I
யத்ரார்யபுத்ரம் விஸஸர்ஜ மூடா ***ராமாநுஜம்*** லக்ஷ்மணபூர்வஜஞ்ச II
(ஸு. 28-10)

10 •உபஸ்த்திதா ஸா ம்ருதுஸர்வகாத்ரீ சாகாம் க்ருஹீத்வா த நகஸ்ய தஸ்ய I
தஸ்யாஸ்து ராமம் ப்ரவிசிந்தயந்த்யா: ***ராமாநுஜம்*** ஸ்வம ச குலம்
சுபாங்க்யா: II (ஸு. 28-19)

11 •ஸ பாணவர்ஷந்து வவர்ஷ தீவ்ரம் ***ராமாநுஜ:*** கார்முகஸம்ப்ரயுக்தம் I
க்ஷுரார்த்தசந்த்ரோத்தம கர்ணிபல்லை: சராம்ச்ச சிச்சேத ந சுக்ஷுபே ச II
(யு. 59-101)

12 •தத் த்ருஷ்ட்வேந்த்ரஜிதா கர்ம க்ருதம் ராமாநுஜஸ் ததா I
அசிந்தயித்வா ப்ரஹஸந் நைதத் கிஞ்சிதிதி ப்ருவந். II (யு. 89-15)

13 இதோ கச்சத பச்யத்த்வம் வத்த்யமாநம் மஹாத்மநா I
ராமாநுஜேந வீரேண லவணம் ராக்ஷஸோத்தமம். II (உ. 70-30)

14 •ததோ ராமாநுஜ: க்ருத்த: காலஸ்யாஸ்த்ரம் ஸுதாருணம் I
ஸம்வர்தம நாம பரதோ கந்தர்வேஷ்வப்ப்யசோதயத். II (உ. 101-7)



ஸ்ரீமதுபயவே,
பின்னைபாக்கம், பஹுகுடும்பி.
**P.B. அனந்தாசாரியர் ஸ்வாமி**
B A., B. L.,
Advocate
Madras.

குறிப்பு:— பிங்கள ௵ முடிய இதழ்
தோறும் இங்ஙனே மஹான
கள் ஸேவை ஸாதிப்பர்கள்.
P.B A.

# இராமாநுசன்

ஸ்ரீ D. ராமஸ்வாமி அய்யங்கார், சென்னை-84

"ராமாநுஜ:" என்ற வட சொல்லின் தமிழ் வடிவம் "இராமாநுசன்" என்பது. இராமனுக்குப் பின் பிறந்தவன் (தம்பி) என்பது அச்சொல்லுக்குப் பொருள்; ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீராம பத்ரனுடைய ஸஹோதரர்களான பரதன், இலக்குவன், சத்துருக்கனன் ஆகிய மூவரையும் அச்சொல் குறிக்கவல்லது. ஸ்ரீமத் பாகவதத்தில் ராம சப்தம் பலராமனைச் சொல்வதால், அங்கே கண்ணனாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ராமாநுஜனாக வ்யவஹரித்தருளி யிருக்கிறார் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன். "நநு ராமாவரஜ: ஸ ஏஷ பூய:"—இது 'யதிராஜ ஸப்ததி'யில் கண்ணபிரானுக்கும் உடையவருக்கும் ச்லேஷாலங்காரத்தில் அமைக்கப்பட்ட ஒரு ச்லோகத்தின் கடைசிப் பாதம்.

ஆனால் ராமாநுஜ சப்தம் பொதுவாக லக்ஷ்மணனையும், ஆசார்ய ச்ரேஷ்டரான நம்மிராமானுசனையுமே குறிக்கும். பரதாழ்வானிடமும், சத்ருக்நாழ்வானிடமும்—ஏன்? கண்ணபிரானிடத்திலும் கூட—பார்க்கப்படுகின்ற பல பெருமைகள் நம்மிராமானுசனிடமும் உள்ளன. அவைகளில் இழியாமல் லக்ஷ்மணனுக்கும் நம்மிராமானுசனுக்கும் பொதுவாகக்காணப்படும் பெருமைகளுள் ஒன்றிரண்டை இங்கே அனுபவிக்க முற்படுவோம். யதிராஜ ஸப்ததியில் பலவிடங்களில் லக்ஷ்மண சப்தத்தையே ராமாநுஜ சப்தத்துக்குப் பர்யாய பதமாக (ஒரே பொருளையுடைய சொல்லாக) உபயோகித்திருப்பதைக் காணலாம்.

இன்று (3—4—77) பங்குனி உத்தரத் திரு நன்னாள். பெரிய பிராட்டியார் பாற்கடலில் ஆவிர்ப்பவித்துப் பெருமாள் திரு மார்பை அலங்கரித்தருளிய ["பச்ய தாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:"] மஹோத்ஸவதினம். எல்லா விஷ்ணு ஆலயங்களிலும் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் திருக்கலியாண மஹோத்ஸவம் நிகழும் இன்று; விசேஷமாகக் கோயிலில் (ஸ்ரீரங்கத்தில்) இன்று வைபவம் மிகுந்த உத்ஸவம். பெருமாள் ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதிக்கு எழுந்தருளி அங்கே இருவருமாகச் சேர்த்தியில் ஸாதிக்கும் ஸேவை இன்று ஒரு நாள் மட்டும் அனுபவிக்கக்கூடிய பெருமை. இந்த நிகழ்ச்சியைக் கூர்ந்து அநுபவிக்கும் முன்னர் ஸ்ரீமத் ராமாயணத்தில் அயோத்யா காண்டத்தில் நடந்த நிகழ்ச்சி யொன்றை ஞாபகமூட்டிக்கொள்வோம்.

உதயமானவுடன் சக்ரவர்த்திதிருமகனுக்குப் பட்டாபிஷேகம் நிகழப் போகிறதென்று உலகம் முழுவதும் எதிர்பார்த்திருக்குங்கால் கைகேயியின் சூழ்ச்சியால் அது நின்றுவிட்டது. சக்கரவர்த்தி கைகேயியின் அந்தப்புரத்தில் திக்கித்துக்கொண்டு விழிக்கும்பொழுது அவளே சுமந்திரர் மூலம் இராமபிரானை வரவழைத்து "உன்னைப் பதினான்கு வருஷம் காட்டுக்குச் செல்லும்படி அரசன் ஆணை, இன்றே செல்" என்றாள். தனது தாயான கௌஸல்யையை ஆச்வாஸப்படுத்தி, தன் பத்னி ஸீதைக்கு ஆறுதல் சொல்லும்வரையில் தனக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று அவளிடம் யாசித்துவிட்டு நேராகத் தாயார் அந்தப்புரம் சென்று அங்கே விஷயத்தைச் சொல்லி அவள் பட்ட துன்பத்தை ஆறுமாறு போக்கி, அவ

ளுடைய ஆசீர்வாதங்களைப்பெற்றுச் சீதையின் அந்தப்புரம் சேர்ந்தார் பெருமாள். "வனம் செல்லவேண்டும் யான்" என்று பெருமாள் சொன்னாரோ இல்லையோ, உடனே "உமக்கு முன் யான் செல்கிறேன்" "அக்ரதஸ்தே கமிஷ்யாமி" என்று சொல்லிக்கொண்டு, தானும் புறப்பட யத்தனித்தாள் பிராட்டி. அப்போது பெருமானுக்கும் பிராட்டிக்கும் வெகுவாக வாக்குவாதங்கள் நிகழ்ந்தன. ஓரளவில் அவர்களுக்கிடையே கலஹம் முற்றி இறுதியில் பெருமாளை நோக்கி "நீரும் ஓர் ஆண்பிள்ளையா?" என்று பிராட்டி ஏசிப்பேசவும், அதைத் தாங்காத பெருமான் சமாதானம் செய்து பிராட்டிக்குத் தம்முடன் வனம் வர அனுமதி கொடுத்தருளினார். இந்தச் சரித்திரம் விஸ்தாரமாக ஸ்ரீமத் ராமாயணத்தில் காணப்படுகிறது.

பெருமானுக்கும் பிராட்டிக்கும் வாக்குவாதங்கள் வலிதாக நிகழும் பொழுது இளையபெருமாள் வெளியே நின்று கொண்டு கைகட்டிக் காத்திருந்தார். இறுதியில் அவர்களுடைய ஊடல் முற்றுப் பெறவும் அவர்கள் கூடியிருந்து ஏகமனதாய்க் களிப்பதைக் கண்ணுற்றார்; பேருவகை பூத்தார். உடனே இளையபெருமாள் என்ன செய்தார் என்பதை வால்மீகி பகவான் வெகு அழகாகச் சித்திரித்திருக்கிறார்.

"ஸ ப்ராது: சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: ।
ஸீதாமுவாச அதியசா: ராகவம் ச மஹாவ்ரதம் ॥"
—(அயோ-31ம் ஸர்கம், 2ம் ச்லோகம்.)

அந்தத் திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் சரணாகதி செய்தார். எதற்காக? தமக்கு அத்தம்பதிகளின் திருவடிகளில் நிரந்தர கைங்கர்யம் ஸித்திப்பதற்காக. அந்தச் சரணாகதியை அவர் அனுஷ்டித்த பிரகாரம் விவரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது சுலோகத்தில். சீதா தேவியைப் பிரார்த்தித்தார். பெருமாளையும் (ராகவம்ச) பிரார்த்தித்தாராம். அந்தப் பெருமாள் மஹாவ்ரதராம். பெரிய விரதம்பூண்டவர். "ஒருக்காலே சரணாக அடைந்தவரை (அடைக்கலம் புகுந்தவரை) ஸம்ரக்ஷிக்கும் விரதம். பெருமாள் ராகவனும், இளைய பெருமாள் ரகுநந்தனனும் அதற்கு மேலும் ஒரு அடைமொழி இளவலுக்கு. "அதியசா:" மிகுந்த கீர்த்தி வாய்ந்தவரென்று. பெருமாளும் தாயாருமான மிதுனமே உபாயம். அவர்கள் திருவடிகளில் கைங்கர்யமே பலம் என்று உணர்ந்தது மாத்திரமன்றி, அதை இப்படி ரஸமாக அனுட்டித்துக் காட்டியதே அவரது ஒப்பற்ற பெருமை, அதியசஸ். இந்த அனுஷ்டானம்தானே ஆச்ரயண வேளையோடு போக வேளையோடு வாசியற ஒரு மிதுனமே உத்தேச்யம்" என்ற ஒரு ஆசாரிய சிரேஷ்டருடைய பங்க்திக்கு ப்ரமாணம்.

இப்பொழுது இளையாழ்வார் என்ற திருநாமம் வஹிக்கும் நம்பிராமானுசனுடைய சரித்திரத்தை உற்று நோக்குவோம். முன்னே சொன்னபடி ஸ்ரீரங்கத்தில் பங்குனி உத்தர மஹோத்ஸவம் நடக்கிறது. கணக்கற்ற சிஷ்யர்களோடு ஆசார்ய வள்ளல் ஸ்ரீபாஷ்யகாரர்கூட எழுந்தருளி இருந்து மஹோத்ஸவத்தை அநுபவிக்கிறார். பெருமாள் நாச்சியார் ஸந்நிதிக்கு எழுந்தருளினதும் ஊடலின்பத்தை நுகர அந்தத் திவ்யதம்பதிகள் சற்றுப் பிணங்கி நிற்கிறார்கள். பெரிய பிராட்டியார் பல குற்றச்சாட்டுகளைப் பெருமான் மேல் செய்தருள, பெருமாளும்

அவைகளுக்கெல்லாம் வெகு சாதுர்யமாகப் பதிலளித்துக்கொண்டே வருகிறார். சற்று நேரத்தில் இந்தப் பிரணய கலஹம் முடிவடைகிறது. பெருமாளும் நாச்சியாரும் ஸமாதானமாகப் போய் ஏகாஸனத்தில் வீற்றிருக்கிறார்கள். பார்த்தார் இராமானுசன்—முன் அவதாரத்தில் (லக்ஷ்மணாவதாரத்தில்) நடந்த நிகழ்ச்சி மீண்டும் நிகழ்ந்தது. (History repeated itself). அன்று லக்ஷ்மணன் சரணமடைந்தது போல் இன்று லக்ஷ்மணார்யர் சரணம் புகுந்தார். அன்று சீதையிடம் விண்ணப்பித்துக்கொண்ட பிறகே இராமனிடம் விண்ணப்பித்துக்கொண்டவண்ணமே, இன்றும் பெரிய பிராட்டியாரிடம் புருஷகாரப் பிரபத்தியை அனுஷ்டித்துப் பிறகே பகவச் சரணாரவிந்த சரணாகதியை அனுஷ்டிக்கப் புக்கார். சரணாகதி கத்யம் அவதரித்தது. இளவல் 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று மனோரதித்து நின்றார். இளையாழ்வார் 'நித்ய கிங்கரோ பவாநி' என்று பிரார்த்தித்துத் தலைக்கட்டுகிறார் கத்யத்தை.

ஆகவேதான் அன்று 'அதியசா:' என்று பட்டம் பெற்றவர் இன்று 'திக்குற்ற கீர்த்தி இராமானுசன்', 'ஏராணி கீர்த்தி இராமானுசமுனி', என்றும், 'விஷ்வக்வ்யாபிந்யகாதே யதிந்ருபதி யசஸ்ஸம்பதேகாரணமேஸ்மின்' என்றும் பாராட்டப் பெற்றிருக்கிறார்.

ரஸிகர்கள் இவ்விரு ராமானுசர்களுக்கிடையே வேறு பல ஒற்றுமைகளையும் கண்டு களிக்கலாம். இன்னும் ஒன்று மட்டும் இங்கே குறிக்க விரும்புகிறேன். அதிபால்யத்திலேயே பெருமானுடைய திருக்கண்களின் அழகில் ஈடுபட்டு 'கப்யாஸம்' சுருதிக்கு அழகான பொருளைத் தமது ஆசானுக்கு எடுத்துச்சொன்ன பெருமை நம்மிராமானுசனுக்கு உண்டு. பெருமாள் திருக்கண்களில் விசேஷ ஈடுபாடு உடையவர் இளையபெருமாள் என்பதை ராமபக்த சிகாமணியாம் ஸ்ரீ தியாகையர் ஒரு கீர்த்தனத்தில் அழகாகக் காட்டியிருக்கிறார். ''காரணமில்லாமலா (லேகனு) ஹே ராம! உன்னை ஏகமனதாய்ச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று பொருள்படும்படியான பல்லவி கொண்ட அசாவேரிக் கீர்த்தனையில் ஒவ்வொருவரும் ராமனுடைய ஒவ்வொரு பெருமையில் ஈடுபட்டு நிற்கிறார்கள் என்று பாடிக்கொண்டு வரும்போது, ''ஸௌமித்ரிக்கு இராமனுடைய கண்களில் நிரம்ப சுகமுண்டு'' என்று பாடியிருக்கிறார்.

இப்படிப்பட்ட பல காரணங்கள் கொண்டுதான் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீ பாஷ்யகாரரைப் ''பின்னருளால் பெருப்பூதூர் வந்த வள்ளல்'' என்று பேசி மகிழ்கிறார். முதலருள் வடிவில் ஆதிசேஷன், இரண்டாவது இலக்குமணன், மூன்றாவது பலபத்திரன், இறுதியில், ''கொள்ளக் குறைவற்று இலங்கி, கொழுந்து விட்டோங்கிய வள்ளல் தனத்தினால் வல்வினையோமாகிய நம் மனத்துள்ளும் புகுந்து நிற்கும் குணம் திகழ் கொண்டலாம் நம்மிராமானுசன். ராமனையிட்டு லக்ஷ்மணனை ராமாநுஜன் என்றும், லக்ஷ்மணனையிட்டு ராமனை லக்ஷ்மண பூர்வஜன் என்றும் நிர்தேசித்துப் போந்தாள் ஸீதாதேவி. அந்த முறையைப் பின்பற்றி நாமும் பெருமான் அளித்த ஆசார்யன் இராமானுசன் என்றும், இராமானுசன் காட்டிய பரதெய்வம் ''ச்ரிய: பதி:'' என்றும் மறவாமல் மனத்துக் கொண்டு மகிழ்வோமாக. ... ... ... ... ...

# அபயப்ரதானத்தில் எம்பெருமானருடைய அபயப்ரதானம் - P.B.A.

ஸ்ரீராமாயணத்தில் அபயப்ரதான மென்பது ஒரு கட்டம். விபீஷணாழ்வான் மிகுந்த ஆர்த்தியோடு கடற்கரையிலே வந்து சரணாகதி செய்தபோது ஸுக்ரீவமஹாராஜர் முதலானோர் அவனை அங்கீகரிக்கலாகாதென்று வலிதாக ஆக்ஷேபிக்குங்காலத்தில் அவனுடைய வுள்ளம் சாலவுமஞ்சிக் கிடந்தது. அச்சமயத்தில் பெருமாள் அவனுக்கு அபயமளித்தார். அப்போது பெருமாளருளிச் செய்த "ஸக்ருதேவ ப்ரபந்நாய" என்கிற சரமச்லோகத்திலே 'அபயம் ததாமி' என்கிற வாக்கியமிருப்பதனால் அந்தகட்டம் அபயப்ரதான கட்டமென்று வழங்கப்பட்டு வருகிறது. ஸ்வாமி எம்பெருமானார் ஒருநாள் ஒரு பெரிய திருவோலக்கத்திலே அந்த கட்டத்தை மிக விரிவாக உபந்யஸித்தருளா நின்றார். "த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத:" என்கிறபடியே புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விட்டு விபீஷணாழ்வான் "ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே, நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம்" என்று சொல்லி வானர முதலிகளைப் பிரார்த்திக்க அவர்கள் இவ்விபீஷணனை அநுகூலனாகக் கொள்ளாமல் பிரதிகூலனாகவே கொண்டு அவன்மீது கற்களை விட்டெறிவது, பெருமாளிடம் ஆக்ஷேபிப்பது முதலாகப் பல தீமைகளை யிழைக்கத் தொடங்கினார்கள்—என்னுமிவ்விஷயத்தை ஸ்வாமி உபந்யஸித்தருளா நிற்கையில் அப்போது அனந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவரான பிள்ளையுறங்காவில்லிதாஸர் கோஷ்டியில் நின்றும் எழுந்து விக்கி விக்கியழுது தம்முடைய வொரு பெரிய ஸந்தேஹத்தை விண்ணப்பஞ் செய்து இதைப் பரிஹரித்தருளினாலொழிய மேலே கதை கேட்க விருப்பமில்லாமையைக் கூறி நின்றார்.

அவர் விஜ்ஞாபித்த ஸந்தேஹமாவது — விபீஷணாழ்வான் உண்மையான பரமபக்தன்; அவனுக்கு ஆர்த்தி முதலிய அதிகார பூர்த்தியில் யாதொரு குறையுமில்லை; ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும் கபடமாகவல்லாமல் உண்மையாகவே உண்டாகி நெஞ்சுகனிந்த பக்தியுடன் வந்து சேர்ந்த இவனுக்கே பகவத் கோஷ்டியில் ப்ரவேசம் எளிதாகக் கிடைக்கவில்லை யென்றும், பகவானுக்கு அந்தரங்க மந்திரிகளாக இருந்தவர்களால் மிகுந்த பரிபவமும் ஆக்ஷேபமும் விளைந்தனவென்றும் கண்டால் அவ்விபீஷணாழ்வானுடைய அதிகாரத்தில் நூற்றிலொன்றுகூட இல்லாத எம்போலியர்க்கு பகவதங்கீகாரத்தைக் கனவில்கூடக் காண்பதற்கு ப்ரஸக்தியில்லையன்றோ; ஆகவே எம்போலியர் உஜ்ஜீவிக்க வழியுண்டோ இல்லையோ! என்று நெஞ்சு கலங்கி நிற்கின்றது—என்பதாக.

இது எல்லோருக்குமே ஜனிக்கவேண்டிய ஸந்தேஹந்தான். ஆனால் அந்த ஸமயத்தில் பிள்ளையுறங்காவில்லிதாஸரொருவர்க்கே ஜனித்தது. இந்த ஸந்தேஹத்திற்குப் பரிஹாரமுறை என்னவென்று தெரிந்துகொள்ள ஒவ்வொருவரும் குதூஹலங்கொள்ள வேண்டியதேயாகும். கேண்மின். எம்பெருமானார் உடனே அவர்க்குப் பரமந்தரங்கமாகப் பணித்த ஸமாதானம் யாதெனில்; விபீஷணாழ்வானைப்போலே நாம் எம்பெருமானைப் பற்றினோமன்றோ இப்படி ஸந்தேஹித்து இடிவிழுந்து நிற்கவேண்டும். நாம் எம்பெருமான் கைபார்த்திருக்குமவர்களல்லோங் காணும்; உனக்கு நானுண்டு, எனக்குப் பெரிய நம்பியுண்டு, பெரியநம்பிக்கு ஆளவந்தாருண்டு......அஞ்சாதே'' என்றார்.

இதன் கருத்தாவது, எம்பெருமான் மோக்ஷமளிக்கவும் வல்லன், மேன்மேலும் ஸம்ஸாரத்திலே தள்ளவும் வல்லவன். நிக்ரஹாநுக்ரஹங்களுக்குப் பொதுவான ஸ்வாதந்திரியமுடையவனாகையாலே அவனைப் பற்றினார்க்கு நெஞ்சு தளும்பியே கிடக்க நேரும். அவனைப் போலன்றிக்கே அநுக்ரஹமே வடிவெடுத்த ஆசாரியர்களைப் பற்றினார்க்கு ஸந்தேஹ கந்தமுமின்றிக்கே மார்விலே கைவைத்து உறங்கலாம்படியிருக்கும் என்கை. இவ்வர்த்தம் மஹர்ஷிகளின் வசனத்தாலும் தேறி நின்றது. *ஸித்திர் பவதி வா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம், ந ஸம்சயோஸ்தி தத்பக்தபரிசர்யா ரதாத்மநாம்* என்கிற ப்ரமாணத்தை இங்கே அநுஸந்திப்பது. இதன் பொருள்; எம்பெருமானைப் பற்றினார்க்கு ஸத்கதி ப்ராப்தியாகிற ஸித்தியுண்டோ இல்லையோ என்கிற ஸந்தேஹமுள்ளது; தத்பக்தர்களாகிற பாகவதர்களைப் பற்றினார்க்கு அப்படிப்பட்ட ஸந்தேஹம் உதிக்கவேமாட்டாது என்பதாம்.

இங்ஙனே அவரவர்கள் தம் தம் ஆசாரியர்களைப் பணிந்து உஜ்ஜீவிக்கவென்பது இருக்கச் செய்தேயும் *தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யக்ர* என்று பூருவர்கள் ஒருமிடறாக நிஷ்கர்ஷித்திருக்கையாலே ஆசார்யனென்கிற சொல்லுக்குப் பொருளாயிருக்குந் தன்மை எம்பெருமானாரொருவர்க்கே உரித்தாகவுள்ளதாதலால் அவருடைய திருவடிஸம்பந்தத்தை அநுதினமும் சிந்தித்திருப்பார்க்கு விசாரலேசமுமில்லையென்று தெளிவது. ... ...

## பகவத் ராமாநுஜ சரித்திரத்தில் ஒரு விமர்சம்

(ஸ்ரீ. நல்லப்பா ஜீயப்பங்கார்.)

ஸ்ரீராமாநுஜரின் வைபவத்தைப் பற்றிக் கூறும் குருபரம்பராப்ரபாவம் முதலிய பழைய சரித்திர நூல்களில் அடியில் கண்ட வாலாறுகள் கூறப்படுகின்றன; இந்த மஹாசாரியர் ஸ்ரீரங்கத்தில் தரிசன நிர்வாஹம் செய்துகொண்டு போந்த நாட்களில் அங்குக் கொடுங்கோன்மை புரிந்துவந்த சோழராஜன் ஒருகால் வைணவர்களுக்குச்செய்த ஹிம்ஸைகளைத் தாங்கமுடியாமல், அவர் மேல நாட்டுக் கெழுந்தருளும்படியாயிற்று. அங்கு மைஸூர் ப்ராந்தத்தில் தொண்டனூர் என்னும் கிராமத்தில் சிலகாலம் அவர் தங்கியிருந்தார். அப்போது மைஸூரை ஆண்டுகொண்டிருந்த விடலதேவன் என்னும் க்ஷபண (ஜின) அரசனை வைணவ மதத்திற்குத் திருத்தி, அவனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்னும் புதிய பெயரையும் தந்து, தம்முடைய சிஷ்யர்களில் ஒருவராக ஆக்கிப் பணிகொண்டார். அச்சமயம் ஸ்ரீராமாநுஜர் ஒருகால் ஊர்த்வபுண்ட்ரம் சாத்திக் கொள்ளத் திருமண் அகப்படாமல் சோகித்திருந்தபோது திருநாராயணபுரத் தெம்பெருமான் ஸ்வப்னத்தில் ஸேவை தந்து தம்முடைய அர்ச்சா விக்ரஹம் பூமியின் கீழ்ப் புதைந்து கிடந்த விடத்தையும், அதற்குச் சமீபத்தில் திருமண் அபரிமிதமாக மறைந்து கிடந்த விடத்தையும் காட்டியருளினார். பிறகு 'ராமப்ரியர்' என்னும் தம்முடைய அழகிய உத்ஸவ மூர்த்தி வடநாட்டில் டெல்லியில் ஒரு துருஷ்கராஜனின் அரண்மனையில

அகப்பட்டுக் கொண்டிருந்ததையும் ஸ்வப்னமுகேந அறிவித்தார் உடனே இராமானுஜர் டெல்லிக்கு எழுந்தருளி, அங்கிருந்த துருஷ்க அரசனை யனுகி அந்த உத்ஸவ மூர்த்தியை மீளவும் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளப்பண்ணி க்ரமேண ப்ரதிஷ்டை செய்வித்தார், என்று. (இது சுருக்கமாக வரைந்தபடி)

இது விஷயமாக, ஒரு வடநாட்டுப் பெரியார், "இராமானுஜர் காலத்தில் டெல்லிப் பிராந்தத்தில் துருஷ்க ராஜ்ஜியம் ஏற்பட்டிருந்ததில்லை; அதையால் இராமானுஜர் திருநாராயணபுரத்து உத்ஸவமூர்த்தியைத் துருஷ்க ராஜாவிட மிருந்து மீட்டுக்கொண்டு போவதற்காக டெல்லிக்கு எழுந்தருளினாரென்று தென் தேசத்திய வைணவர்கள் தங்களது சரித நூல்களில் எழுதிவைத்திருப்பது மிகவும் ஆதாரமற்றது" என்று எழுதியுள்ளார். இதைப்பற்றி சரித்திர ரீதியாகச் சில விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

வட இந்தியாவின் சரிதம் சரியாக எழுதப்பட்டிருக்கும் எந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தாலும் இராமானுஜர் காலத்தில் டெல்லி ப்ராந்தத்தில் துருஷ்க ஸாம்ராஜ்யம் ஏற்பட்டிருந்ததென்று ஸந்தேஹமற விளங்கும். இராமானுஜர் உயிர் வாழ்ந்திருந்த காலம் கி. பி. 1017—1137 வரையில். இதைப்பற்றி இதுவரையில் எவர்க்கும் யாதொரு ஸந்தேகமும் ஏற்பட்டிருந்ததில்லை. கஜனி மஹமது (Mahmud of Gazni) துருக்கியிலிருந்து வட இந்தியாவில் படையெடுத்து வந்து பஞ்சாபில் ஜெயபாலன் என்னும் அரசனை வென்றது கி பி. 1001-ம் வருஷத்தில் (Pleas see. for instance, "The Oxford History of India" by Vincent A. Smith, C.I.E. 1921 pages 190 to 192). அவன் யமுனை நதியைக் கடந்தது கி. பி. 1018ம் வருஷம் டிசம்பர் மாதம் 2-ம் தேதியில், இவ்வருஷத்திலேயே மதுரையும் தாக்கப்பட்டது. பஞ்சாப் முழுதும் பிடிபட்டது. கி. பி 1019-ம் வருஷம் கனோஜ் (Kanauj) பிடிபட்டது. கி. பி. 1022-ல் லாஹுர் முழுவதிலும் துருஷ்க ராஜ்யம் ஏற்பட்டுவிட்டது (Pl. see P. 6. Ch. ii Lethbridge's History of India). கி. பி. 1024—25-ல் கத்தியவாரிலுள்ள பெயர் பெற்ற ஸோமநாத் கோயில் (Somnath Temple) தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. மஹாவீரனான கஜனி மஹமது (Gazni Mahmud) கி.பி 1030ல் இறந்துவிட்டாலும், அவனுக்குப்பிறகு அஹமது (Ahmad) வட இந்தியாவை ஆண்டான். கி பி- 1098-ல் இரண்டாம் மஸூது (Masud the second) ஆண்டுகொண்டிருந்தான், கி. பி. 1100ம் வருஷம் வரையில் கஜனவிட் துருஷ்கராஜ்யம் வட இந்தியாவில் பலமாக விருந்திருக்கிறது. பிறகே இது க்ஷீணதசையை அடைந்திருக்கிறது.

இராமானுஜர் முதன் முதல் திருநாராயணபுரம் எழுந்தருளியபோது அவருக்கு வயது ஏறக்குறைய 80 என்று மைஸூரிலுள்ள கல்வெட்டுகளினால் ஏற்படுகிறது. அவர் டெல்லிக்குப் போனது கி. பி. 1097-க்கு மேல் 1100க்குள்ளிருந்திருக்க வேண்டும் அப்போது கஜனவிட் துருஷ்க ராஜ்ஜியம் டெல்லி ப்ராந்தத்தில் ஸந்தேகமற இருந்திருக்கிறது.

கனோஜ்(Kanauj) நகரை துருஷ்க அரசர்கள் வெகுகாலம் தங்களது முக்கிய தலைநகரமாக வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் கஜனி மஹமது இறந்த

பிறகு லாகூர், டெல்லி முதலிய நகரங்களும் முக்கிய ஸ்தலங்களாக விருந்திருக்கின்றன. திருநாராயணபுரத்து உத்ஸவ மூர்த்தி இராமாநுஜர் எழுந்தருளிய போது கஜ்னியிலேயே இருந்திருக்கலாம். அந்த நகரைத் தென் தேசத்தவர்கள் டெல்லியாக வழங்கி யிருக்கலாம். அல்லது லாகூரிலேயோ டெல்லியிலேயோ அது இருந்திருக்கலாம். ஊரின் பெயர் முக்கியமல்ல; வட இந்தியாவில் ஒரு துருஷ்க அரசனின் வசத்திலிருந்ததே முக்கியம்.

அடுத்தபடியாக எழும் முக்கியமான கேள்வி என்னவென்றால், எப்படி மேல்கோட்டையிலிருந்து (திருநாராயணபுரத்திலிருந்து) இந்த விக்ரஹம் வடதேசத்திற்குச் சென்றது என்பதே. கி. பி. 1097-க்கு முன் துருஷ்க ஆதிக்யம் மைசூர் பிராந்தம் வரையில் சென்றிருந்ததா வென்கிற கேள்வி எழக்கூடும். ஒரே ஒரு சாக்ஷிதான் இவ்விஷயத்தில் நமக்கு உதவுகிறது' மைசூரில் தொண்டனூருக்கருகில் ஒரு கல்வேட்டிருக்கிறதாம். இந்தக் கல்வெட்டிலிருந்து, கஜனிமஹமது ஸேனையைச் சேர்ந்த ஓர் தீவிர மஹமதிய வீரன் அது வரையில் படையெடுத்து வந்து அங்கு மாண்டு புதையுண்டிருக்கிறான் என்று ஏற்படுகிறதாம். (Vide P. 189 Foot-note in "The life of Ramanuja" by A. Govindacharya) கஜனி மஹமத்தின் அட்டூழியம் எவ்வளவு தூரம் ஊடுருவிச் சென்றிருக்கிறது என்பது இதனால் விளங்குகிறது. நமது குருபரம்பராப்ரபாவாதிகளில் கூறப்பட்டிருக்கும் ஐதிஹ்யமும் ஸ்தாபிதமாகிறது. ... ... ... ...

## மூன்று திவ்யங்களின் அநுபவம்

உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் மிகச் சிறந்ததைச் சொல்லுமிடத்து திவ்யமென்னுஞ் சொல் யாவராலும் கையாளப் படுகிறது; ததியாராதனை திவ்யமாயிருந்தது. உபந்யாஸம் திவ்யமா யிருந்தது. அழகியமணவாளன் ஸேவை அதி திவ்யமாயிருந்தது—என்றிப்படியே எங்கும் வார்த்தைப்பாடு உள்ளது பகவத்கீதையில் கண்ணபிரான் தன்னுடைய அவதாரத்தையும் சேஷ்டிதத்தையும் சிறப்பாகச் சொல்லுமிடத்து "ஜந்ம கர்ம ச மே திவ்யம்" என்கிறான். விச்வரூபம் காண்பதற்காக அர்ஜுநனுக்குச் சிறந்த சக்ஷுஸ்ஸைக் கொடுப்பதாக அருளிச் செய்யுமிடத்து 'திவ்யம் ததாமி தே சக்ஷு:' என்கிறான். இவற்றால் திவ்யபதத்தின் சீர்மை அறியத்தக்கது.

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ப்ரமாணம், ப்ரமாதா, ப்ரமேயம் என்ற மூன்றையும் சொல்லுமிடத்து திவ்யபதத்தைச் சேர்த்தே சொல்லி வருவதானது தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றது. ப்ரமாணங்களில் தலையானது திவ்ய ப்ரபந்தம். ப்ரமாதாக்களில் தலையானவர்கள் திவ்ய ஸூரிகள். ப்ரமேயங்களில் தலையானவை திவ்யதேசங்கள். இப்படி எல்லாம் திவ்யமாகத் திகழுமழகு நம்முடைய ஸம்ப்ரதாயத்திற்கே அஸாதாரணமான செல்வமாயிருக்கும். இதில் ஒரு விஷயம் ஆராய்ச்சி முறையில் அறிவிக்கப்படுகின்றது.

மதுரகவியாழ்வாரும் ஆண்டாளுமுட்பட ஆழ்வார்கள் பன்னிருவருமருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களை நாலாயிர திவ்ய ப்ரபந்தமென்று வழங்கப் பெறு

கின்றன. இவற்றுள் இராமாநுச நூற்றந்தாதியும் அடங்குகின்றது. திருப்பல்லாண்டு, திருப்பாவை, கண்ணிநுண் சிறுத்தாம்பு, இராமாநுச நூற்றந்தாதி ஆகிய இந்நான்கும் திவ்ய ப்ரபந்தங்களுக்கு அஸாதாரணமான வொரு பெருமையைப் பெறுவதற்காக உரிமையற்றவை போல் காணப்படுகின்றன. ஏன்? திவ்யப்ரபந்தங்களுக்கு அஸாதாரணமான பெருமை ஏதென்னில், உகந்தருளின நிலங்களாகிய திவ்ய தேசங்களை விசேஷமாகப் பேசுகையாம். எம்பெருமானுடைய பர வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரமென்னும் ஐந்து நிலைகளும் திவ்யப் பிரபந்தங்களில் பேசப்பட்டிருந்தாலும் அர்ச்சாவதாரப் பெருமைகளைப் பேசுவதிலேயே இவற்றுக்கு விசேஷநோக்கு என்பது நம் ஆசாரியர்கள் நிலையிட்ட விஷயம். வேதத்திற்குப் பரத்வத்திலே நோக்கு; தர்மசாஸ்த்ரங்களென்கிற ஸ்மிருதிகளுக்கு அந்தர்யாமியிலே நோக்கு; திவ்ய ப்ரபந்தங்களுக்கு அர்ச்சையிலே நோக்கு என்னும் விஷயமானது ஆசார்ய ஹ்ருதயத்தில் "அதவா, வேதவேத்யந்யாயத்தாலே பரத்வபர முதுவேதம்" என்று தொடங்கியுள்ள (70) சூர்ணையின் வியாக்யானத்திலே விசதமாகக் காணலாகும். நாம் திவ்ய தேசங்களின் பெருமைகளை யநுபவிக்க வேணுமானால் திவ்யப்ரபந்தங்களிலல்லது வேறு எங்கிலும் அநுபவிக்க முடியாதன்றோ. ஆகவே திவ்ய தேசப்பெருமையைப் பேசுவதே திவ்யப்ரபந்தங்களுக்கு அஸாதாரணமான பெருமையென்பது நிர்விவாதமாகும்.

இப்படிப்பட்ட பெருமை திருப்பல்லாண்டு முதலிய மேலே குறித்த நான்கு திவ்ய ப்ரபந்தங்களுக்கு ஸம்பவிக்க ப்ரஸக்தியில்லாமலிருக்கிறது. ஏனெனில்:
1. பெரியாழ்வார் பாண்டியராஜனுடைய ஸபையிலே பரதத்வ நிர்ணயம் பண்ணி விரைந்து கிழிபறுத்து யானையின்மீது ஊர்வலம் வருகையில் அந்த மஹோத்ஸவத்தைக் காணவந்த பரமபத நாதனை நோக்கியே பல்லாண்டு பாடித் திருப்பல்லாண்டென்கிற திவ்யப்ரபந்தத்தை யருளிச்செய்தாராதலால் அப்போது திவ்யதேசப் புகழ்ச்சி எதுவும் செய்ய ப்ரஸக்தியில்லை யாயிற்று.

2. திருப்பாவை கண்ணபிரானுடைய விபவ காலத்திலேயே நேராக ஆய்ச்சிகள் ஆசரித்த படியை அநுகரித்துப் பேசப் பிறந்த பிரபந்தமாதலால் இதிலும் திவ்யதேசப் புகழ்ச்சி எதுவும் செய்ய ப்ரஸக்தி யில்லையாயிற்று.

3. கண்ணிநுண் சிறுத்தாம்பு, நம்மாழ்வாரையே தெய்வமாகக் கொண்டு அவரைத் துதிப்பதற்கென்றே தோன்றின பிரபந்தமாகையாலும்.

4. இராமாநுச நூற்றந்தாதி எம்பெருமானாரையே தெய்வமாகக் கொண்டு அவரைத் துதிப்பதற்கென்றே அவதரித்ததாகையாலும் இவற்றிலும் திவ்யதேசப் புகழ்ச்சிக்கு ப்ரஸக்தியில்லையாயிற்று.

ஆயினும் திவ்ய தேச ப்ரஸ்தாவமில்லாத பிரபந்தம் திவ்யப்ரபந்தமாகமாட்டாதென்று கருதியே மேற்சொன்ன நான்கு பிரபந்தங்களிலும் அந்தந்த ப்ரபந்த கர்த்தாக்கள் திவ்யதேச ப்ரசம்ஸையை ஒருவாறு புகுத்தியுள்ளார்கள்.

1. திருப்பல்லாண்டில் திவ்யதேச ப்ரசம்ஸையைப் புகுத்திருக்கிற விதம் யாதெனில்; அதில் 'அல்வழக்கொன்றுமில்லா' என்கிற பதினோராம் பாட்டில்

பாகவதோத்தமரான செல்வநம்பியென்னுமொரு பெரியாரை த்ருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டத் திருவுள்ளம்பற்றி, அப்பெரியார் திருக்கோட்டியூரென்னும் திவ்யதேசத்தில் வாழ்ந்தவராதலால் அதனைக்கூறும் வழியாலே திருக்கோட்டியூரை ப்ரசம்ஸித்திருக்கிறார். "அணிகோட்டியர்கோ னபிமான துங்கன் செல்வனைப்போல" என்றவிடத்து, அணி கோட்டி யென்றது திருக்கோட்டியூரேயாம். இப் பிரபந்தத்தில் ஒருவாறு திவ்யதேச ப்ரஸ்தாவம் வருவதற்காகவே "அணி கோட்டியர்கோன்" என்கிற ஸ்ரீஸூக்தி புகுவிக்கப் பட்டதென்க. மேலுள்ளதான பலச்ருதிப் பாசுரத்தில் "வில்லிபுத்தூர்விட்டு சித்தன் விரும்பிய சொல்" என்றவிடத்து ஸ்ரீவில்லிபுத்தூராகிற திவ்யதேசத்தின் ப்ரஸ்தாவமிருந்தாலும் அதனால் த்ருப்தியுண்டாக வழியில்லை போலும்.

2. இனி கண்ணிநுண் சிறுத்தாம்பிலும் திவ்யதேச ப்ரஸ்தாவம் ஒருவாறு புகுந்திருக்கின்றது; அதில் பாசுரந்தோறும் குருகூர் என வருவதால்.

3. இராமாநுச நூற்றந்தாதியில் "கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனை" என்றும் "தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்" என்றும் "கண்ணமங்கை நின்றானைக் கலைபரவும்" என்றும், "பொன்னரங்க மென்னில் மயலே பெருகுமிராமாநுசன்" என்றும் "நிறைவேங்கடப் பொற்குன்றமும்" என்றும் "இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யென்னும் பொருப்பிடம்" என்றுமிங்ஙனே பல பாசுரங்களில் ப்ராஸங்கிகமாக திவ்யதேச ப்ரசம்ஸை செய்திருக்கையாலே அது தன்னிலும் திவ்யதேச ப்ரதிபாதநம் குறையற்றதாயிற்று.

4. இனி திருப்பாவையில் இக்குறையில்லாமையை விவரிக்கிறோம். உண்மையில் திருப்பாவையில் ஒரு திவ்யதேசத்தின் ப்ரசம்ஸையும் ப்ராப்தமாகவில்லை. "திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி அங்கு அப்பறை கொண்டவாற்றை" என்று, அக்காலத்தில கோபிகள் செய்தபடியை அப்படியே அநுகாரம் செய்தும் அநுபவம் செய்தும் அருளிச்செய்த பிரபந்தமன்றோ திருப்பாவை. இதில் அவ்வாய்ச்சிகள் செய்யாத திவ்யதேச ப்ரசம்ஸையை ஆண்டாள் செய்ய ப்ரஸக்தி இல்லையன்றோ. ஆனால் யசோதைப் பிராட்டி கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டினபடியை அவளுடைய பாவனையினால் கூறுகின்ற பெரியாழ்வார் "குடந்தைக் கிடந்தானே! தாலேலோ" என்றது போலவும், ஆய்ச்சிகள் கண்ணபிரான் செய்த தீமைகளை யசோதைப் பிராட்டியிடம் வந்து முறையிட்டபடியைச் சொல்லுமிடத்து "சாளக்கிராமமுடைய நம்பி சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்" என்றது போலவும், "மன்னுகுறுங்குடியாய் வெள்ளறையாய் மதிள் சூழ் சோலை மலைக்கரசே கண்ணபுரத்தமுதே!.........ஆடுக செங்கீரை" என்று யசோதை செய்யாத திவ்யதேச ப்ரசம்ஸைகளை ஆழ்வார் தாம் செய்திருப்பதுபோலவும், திருவாய்மொழியில் "சூழ்விசும்பணி முகில் என்னும் பதிகத்திலே பரமபதாநுபவங்களைப் பேசுகின்ற நம்மாழ்வார் அங்கு திவ்யதேச ப்ரஸக்தி செய்ய வேண்டிய அவசிய மில்லாதிருக்கவும் "குடந்தையன் கோவலன் குடியடியார்க்கே" என்று திருக்குடந்தைப் பதியின் ப்ரசம்ஸையைச் செய்திருப்பது போலவும்

ஆண்டாளும் திருப்பாவையில் திவ்யதேச ப்ரசம்ஸை செய்யக் கருதினால் பலபடியாக அதைப் புகுத்தமுடியும்; அது அஸாத்யமன்று. "வல்லானை கொன்றானை" என்றும் "மல்லரை மாட்டிய தேவாதி தேவனை" என்றும் திருவாய்ப்பாடியிலுள்ளவர்கள் பேசமுடியாத கதைகளை யிட்டுப் பேசியிருப்பதுபோல "அரங்கத் தரவணைமேலமர்ந்தானைப் பாட வெழுந்திராய்" "வேங்கடத்தெம் வித்தகனை யேத்தவாராய்" என்று பேசியிருக்கலாம். "அன்றிவ்வுலக மளந்தாயடிபோற்றி சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி" என்று வேறு அவதார சேஷ்டிதங்களைச் சொல்லி மங்களாசாஸனம் செய்தது போல "அரங்கத் தரவணைமேலமர்ந்தா யடிபோற்றி" "மாலிருஞ்சோலைமாயனே யடிபோற்றி" என்றிப்படி திவ்யதேச ப்ரசம்ஸை பண்ணி மங்களாசாஸனம் செய்திருக்கலாம். கோயிலைப் பற்றின பேச்சு அடியோடில்லாமல் திருப்பாவையை முடித்தது ஏன்? என்று ஆராய்ச்சி செய்ய ப்ராப்தமாகும். இதற்குத் தெரிவிக்கிறோமிங்கு.

திருப்பாவையில் கோவில் பேச்சு அடியோடு இல்லாதிருந்தால் இதனைப் பெரியோர்கள் திவ்யப்ரபந்தமாகக் கொண்டு ஆதரித்திருப்பர்களோ? இதில் நான்கிடங்களில் கோவில் பேச்சு அழகாகவுள்ளது. (பாட்டு 6.) "புள்ளரையன் கோவில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?" (14) "தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்." (16) "கோயில் காப்பானே." (23) "உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருளி" என்னு மிப்பாசுரங்களில் கோயில் ப்ரஸ்தாவம் வந்திருப்பது குறிக்கொள்ளத்தக்கது. பொதுவாகக் கோவில் என்று உள்ளதேயன்றி ஒரு திவ்யதேச விசேஷஞ் சொல்லிற்றில்லையே யென்று குறையுறவேண்டா; திருவரங்கத்திற்குக் கோயிலென்பதே அஸாதாரணமான வ்யபதேசம். பெரியாழ்வார் தமது திருமொழியில் (2-9-4) "கொண்டல்வண்ணாவிங்கே போதராயே கோயிற்பிள்ளா யிங்கே போதராயே" என்கிறார் இங்குக் கோயிலென்றது ஸாமாந்ய வாசகமன்று. தென்னாடும் வடநாடுந் தொழநின்ற திருவரங்கத் திருப்பதியையன்றோ விசேஷித்துச் சொல்லுகிறது. ஆனால், திருப்பாவையில் கோயிலென்று வந்துள்ள நாலிடங்களிலும் ஸ்ரீரங்கந்தான் விவக்ஷிதமோ வென்று கேட்டுவிட வேண்டா. அர்த்த சக்தியென்பது வேறு, சப்த சக்தியென்பது வேறு. சப்த சக்தியைப் பற்றின நிர்வாஹமிது. "புள்ளும் சிலம்பினகாண்" என்கிற பாட்டிலும் "உங்கள் புழைக்கடை" என்கிற பாட்டிலும் அர்ச்சாவதார ஸந்நிதியை யுத்தேசித்தே கோயிலென்னுஞ் சொல் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றதென்பது நிஸ்ஸந்தேஹம். ஆக, திருப்பாவையிலும் திவ்யதேச ப்ரசம்ஸை யுள்ளதென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று. ... ... ... ...

## ஐதிஹ்யங்களின் ப்ராமாணிகத்வம்

முதன் முதலாக இன்னாரால் சொல்லப்பட்டதென்று தெரிந்துகொள்ள முடியாமல் பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிற புராதநவ்ருத்தாந்தங்களுக்கு ஐதிஹ்யமென்று பெயர். "இதிஹ" என்கிற வடசொல்லின் மேல் 'ஸ்வார்த்தே

ஷ்யஞ்' ப்ரத்யயம் ஏறி ஐதிஹ்யமென்றாயிற்று. இதிஹ, இதிஹ—இப்படியாம் இப்படியாம் என்று வெகுகாலமாகச் சொல்லிவரும் கதை ஐதிஹ்யம் என்றதாயிற்று. பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில்—திருவரங்கம் பெரிய கோயிலிலுள்ள மநுஷ்ய திர்யக் ஸ்தாவர வர்க்கங்களை நித்ய ஸூரிகளாகவும் முக்தர்களாகவும் முமுக்ஷுக்களாகவும் கொள்ளவேணுமென்பதைத் தெரிவித்தருளவேண்டியருளிச் செய்த "அஹ்ருத ஸஹஜதாஸ்யாஸ் ஸூரய:" இத்யாதிச்லோகத்தில் நான்காம் பாதத்தில் "இதிஹ ஸ்ம ப்ராஹு:" என்றார். 'இது நான் புதிதாகச் சொல்லுவதன்று; அநாதிகாலமாகப் பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிறது.' என்கிற விவக்ஷையில் 'இதி ஹ ஸ்ம ப்ராஹு:' என்றருளிச் செய்தபடி.

கர்ண பாரம்பரையாகவே வந்த ஐதிஹ்யங்கள் கால விசேஷங்களில் ப்ராமாணிகர்களால் ஏடுபடுத்தப் படுகின்றன. அங்ஙனம் ஏடுபட்ட ஐதிஹ்யங்கள் நம்பத்தகுந்தவைதானா? என்கிற விசாரம் பிற்காலத்தவர்களுக்கு விளைவதுண்டு. ஏடுபடுத்தினவர்கள் யாவரோ, அவர்களிடத்தில் தேவதாப்ரதிபத்தி யுள்ளவர்கள் நம்புவதும், மற்றையோர்கள் நம்பாமற் போவதும் உள்ளது. பழைய ஏட்டுப் பிரதிகளை அச்சுப் பதிப்புக்குக் கொண்டுவருங் காலத்தில் அவரவர்கள் [முத்ராபகர்கள்] யதேஷ்டமாகப் புதிய கதைகளைச் சேர்ப்பதும் பழையகதைகளை மாறுபடுத்துவதும் உண்டு. இதனால் ஐதிஹ்யங்களைப் பரிபூர்த்தியாக நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறதென்று சிலபல பெரியோர்கள் வருந்திச்சொல்ல நாம் கேட்டிருக்கிறோம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஆழ்வார்கள் விஷயமாகவும் ஆசாரியர்கள் விஷயமாகவும் பல ஐதிஹ்யங்கள் ப்ரஸித்தமாக வுள்ளன. இவற்றில் இதர மதஸ்தர்களின் ப்ரதிபத்தி எப்படிப்பட்டதென்கிற விசாரம் நமக்கு வேண்டா. நம்முடைய தர்சநத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் இவ்வைதிஹ்யங்களை ஸமரீதியான ப்ரதிபத்தியுடன் கொண்டாடி வருகிறார்களா வென்று பார்த்தால் இது தேறுவதில்லை. விச்வகுண தர்சகாரர் 'விதகைசிஹ்ய ஸஹஸ்ரவர்ணநேந' என்று ஒன்று எழுதிவைத்துப் போனார். அதை ஒரு நிதியாகக் கொண்டு ஒவ்வொரு விஷயத்திலும் அதையேயெடுத்துச் சொல்லுவார் பலருளர். பொய்யான ஐதிஹ்யங்களும் கலந்துபோயிருக்கின்றன வென்பதை நாமும் இசைவோம். தாவதா, ஐதிஹ்யங்கள் யாவும் பொய்யானவையென்று சொல்லிவிடுவது யுக்தமன்று.

திருவள்ளூரில் திவான்பஹதூர் T. T. ரங்காசாரியர் என்று ஒரு மஹநீயர் இருந்தார். இவருடைய காலம் 60 வருஷங்களுக்கு முன்பு என்று கொள்ளுங்கள். இவர் லௌகிக உத்யோகத்தில் சிறந்த பதவியில் வாழ்ந்தவராயினும் வைதிகத்திலும் நன்றாகப் படிந்திருந்தவர். உபய வேதாந்த க்ரந்தங்களையும் அதிகரித்திருந்தவர். வேதாந்த தீபிகை யென்கிற பத்திரிகைக்குச் சில வருஷங்கள் ஸம்பாதகராகவுமிருந்தவர். இந்த பஹான் நவீன ஆராய்ச்சித் துறையில் அபிநிவேசமுள்ளவராதலால் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் வழங்கும் ஐதிஹ்யங்களை ஆராயப் புகுந்து விப்ரதிபத்திகள் செய்யத் தொடங்கினார். முந்துற முன்னம் திருமங்கையாழ்வாருடைய சரித்திரத்தை விமர்சிக்கப் புகுந்து, அவ்வாழ்வார் நாகப்பட்டினத்தில் ஸ்வர்ணமயமாயிருந்த ஜைந பௌத்த விக்ரஹங்களை "ஈயத்

தாலாகாதோ இருப்பினும் ஆகாதோ?...... மாயப் பொன் வேணுமோ மதித்துன்னைப் பண்ணுகைக்கே' என்று சொல்லி ப்ரஹரித்து ஹரித்துக் கொண்டுவந்து ஸ்ரீரங்க பிராகார மண்டபாதி நிர்மாண கைங்கர்யத்தில் உபயோகித்தார் என்று குருபரம்பராப்ரபாவத்தில் எழுதப்பட்டுள்ள சரித்திரத்தை யெடுத்துக்கொண்டு "இது மிகவும் அநீதியான வரலாறு; ப்ராமாணிகர்களாய் யோக்யர்களாய்ப் பரம பக்தர்களான ஆழ்வார்கள் இப்படி அநியாய செயல்களைச் செய்தார்களென்று எழுதிவைப்பது நமது பரம பாவனமான மதத்திற்கு இழுக்காகும்" என்று விபுலமாக எழுதி வேதாந்த தீபிகையில் பிரசுரமும் செய்துவிட்டார். அப்போது அதைக் கண்ட நாம் 'ஒரு ப்ரதிஷ்டிதரான மஹான் இப்படி ஸஹஸா எழுதிவிட்டாரே!' என்று மிக வருந்தி அவருக்கு அந்தரங்கமாக வொரு விண்ணப்பமெழுதலானோம். (அதாவது) வெறுந் தமிழ் வசன நூற்களில் மட்டும் காணும் ஐதிஹ்யங்களில் தேவரீர்கள் எவ்விதமாக ஆராய்ச்சி செய்தாலும் செய்க. கூரத்தாழ்வான், பட்டர், வேதாந்த தேசிகன் போன்ற பூருவாசாரியர்களின் ச்லோகபத்தங்களாய் ஸர்வ ஸம்ப்ரதிபந்நங்களான திவ்யஸூக்திகளினால் நிர்விவாதமாக ஏற்படுகிற ஐதிஹ்யங்களிலும் விவாதப்படுவதும், ஹாஹாகாரம் செய்வதும் தேவரீரைப் போன்ற ஆஸ்திகர்களுக்குத் தகுமா? பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "ஜித பாஹ்ய ஜிநாதி மணி ப்ரதிமா அபி வைதிகயந்நிவ ரங்கபுரே, மணிமண்டப வப்ரகணாந் விததே பரகால கவி: ப்ரணமேமஹி தாந்" என்கிற ச்லோகரத்நத்தில் நிஸ்ஸந்தேஹமாகப் பொறித்து வைத்த திருமங்கையாழ்வார் சரித்திரத்தை தேவரீர் அநியாயக் கதை யென்று எழுதிவிட்டால் இதை ஸ்ரீவைஷ்ணவவுலகம் ஏற்குமா? அந்த ச்லோகம் பிற்காலத்தவர்களால் கல்பிக்கப்பட்டு பட்டர் ஸ்ரீஸூக்திமத்யே புகுத்தப்பட்டதென்று தேவரீர் திருவுள்ளமா? இவ்வளவு கம்பீரமான ச்லோகம் பட்டர் தவிர வேறொரு வ்யக்தியால் நிருமிக்க முடியுமா? ஏறக்குறைய 900 வருஷங்களுக்கு முன்பு அவதரித்த இந்த ச்லோகத்தைக் காற்கடைக்கொண்டு, நெஞ்சில் தோன்றினதை எழுதி வெளியிட்டுவிடுவது யுக்தமாகுமா?...இத்யாதிகள் விஜ்ஞாபனம் செய்திருந்தோம். உண்மையில் அவர் பரமாஸ்திகராகையாலே அந்தபட்டர் ஸ்ரீஸூக்தியிலே அத்யந்த ப்ராவண்யங்கொண்டு, தாம் அவசரப்பட்டு எழுதினதற்கு மஹத்தான அநுதாபமுங் கொண்டு நமக்கு பதில் எழுதினார்—"ஸ்காலித்யே சாஸிதாரம்" என்ற முறையை தேவரீர் கைக்கொண்டு சிக்ஷித்ததற்கு மிகவும் க்ருதஜ்ஞனாகிறேன் இத்யாதி.

இது நிகழ்ந்து அறுபது வருஷங்களுக்கு மேலாகிறது. நம்முடைய கடிதத்திற்குப் பிறகு அந்த மஹான் வேதாந்த தீபிகையில் என்ன எழுதினாரென்பது நினைவில்லை. அது நிற்க, இங்ஙனே பல ஐதிஹ்யங்கள் நம் பூர்வாசார்யர்களின் ச்லோக ரூபங்களான ஸ்ரீஸூக்திகளில் திகழ்கின்றன. அவற்றைப் பாராமலே பலர் 'அந்த ஐதிஹ்யம் தவறு, இந்த ஐதிஹ்யம் புளுகு' என்றிப்படி ப்ரஸங்க மேடைகளிற் பேசப் புறப்பட்டு விடுகிறார்கள்.

முதலில் ஸ்வாமி ராமாநுஜர்க்கு உபாத்யாயராயிருந்த யாதவப்ரகாசர் பிறகு இந்த ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்தார் என்ற ஐதிஹ்யத்தைப் பிற மதத்தவர்கள் ஆக்ஷேபிப்பது ஒருபுறமிருக்க; நம்மவர்களும் 'இது ஸம்பாவிதமா?'

என்று சொல்ல வருகிறார்கள். யதிராஜ ஸப்ததியில் தேசிகன் "ஸ்வபலாத் உத்த்ருத யாதவப்ரகாஶ:" என்றருளிச்செய்திருப்பதை யெடுத்துக்காட்டின பிறகு அப்படியா? என்கிறார்கள். ஸ்ரீ ராமாநுஜர் க்ருஹஸ்தராய் ஸ்ரீகாஞ்சியில் வாழ்ந்தபோது சாலக்கிணற்றிலிருந்து தேவப்பெருமாளுக்கு நித்தியப்படியாய் தீர்த்தம் கொணர்ந்து ஸமர்ப்பித்து வந்தாரென்று ஐதிஹ்யமுள்ளது. சதுச்சாஸ்த்ர வித்வானாயிருந்த ஸ்வாமி ஸாமாந்யர்களைப்போல் தலைமேல் தீர்த்தக்குடம் சுமந்து வந்தாரென்பது அவருடைய பெருமைக்குத் தகுமாவென்றும், இதெல்லாம் நவீந காலத்து ஐதிஹ்யமாயிருக்குமென்றும் சிலர் கூசாமல் சொல்லத் துணிகிறார்கள். இவ்விஷயமும் யதிராஜ ஸப்ததியில் "தத்தம் யேந தயா ஸுதாப்புநிதிநா பீத்வா விஶுத்தம் பய: காலே ந! கரிஶைலக்ருஷ்ண ஜலத: காங்க்ஷாதிகம் வர்ஷதி" என்கிற ச்லோகத்தினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது காணும் என்றால் அப்படியா? என்கிறார்கள். இந்த ச்லோகத்தில், ஸ்வாமி ராமாநுஜர் தேவப்பெருமாளுக்குத் தீர்த்தம் ஸமர்ப்பித்தாரென்றிருக்கிறதே யொழிய தினப்படியாக ஸமர்ப்பித்து வந்தாரென்றில்லையே! என்று சிலர் கேள்வி கேட்பதுண்டு; தினப்படியாக வென்பதற்கு ஒரு ப்ரமாணம் காட்டினால் 'தாமே தலையில் சுமந்து வந்து ஸமர்ப்பித்தாரென்று இல்லையே' என்பார்கள்.

ஸ்ரீகாஞ்சீபுரியில் திருவெஃகா என்கிற திவ்யதேசம் ப்ரஸித்தமானது. இத்தலத்தெம்பெருமானுக்கு யதோக்தகாரி யென்று திருநாமம். இத்திருநாமமே தமிழில் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என வழங்கி வருகின்றது. திருமழிசையாழ்வார் காலத்தில் அவருடைய திருவடியான கணிகண்ணனைப் பல்லவமன்னவன் கச்சியிலிருக்கக் கூடாதென்று வெருட்ட, அதனால் கணிகண்ணன் ஊரைவிட்டுப் புறப்பட, அவனைப் பிரிந்திருக்க மாட்டாத ஆழ்வாரும் அவனைப் பின்தொடர, திருவெஃகாவிலெம்பெருமான் தானும் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொண்டு புறப்பட, கச்சிப்பதி முழுவதும் இருள் மூடிப்போக, இதன் காரணத்தை யறிந்த மன்னவன் பதறியோடிச்சென்று பிழை பொறுத்தருளி மீளும்படி பிரார்த்திக்க, பெருமாளும் ஆழ்வாரும் கணிகண்ணனும் மீண்டு வந்து சேர்ந்தார்களென்று ஐதிஹ்யமுள்ளது. அசல மூர்த்தியான அர்ச்சாவதாரப் பெருமான் எழுந்து போனானென்பதும் திரும்பி வந்தானென்பதும் பொருந்துமோவென்று ஸ்ரீ வைஷ்ணவர்களே கேள்வி கேட்கவருகிறார்கள். வேதாந்த தேசிகன் பணித்த யதோக்தகாரி ஸ்தோத்ரத்தில் [வேகாஸேது ஸ்தோத்ரே] ஆறாவது ச்லோகத்தில் இந்த ஐதிஹ்யம் வெகு சமத்காரமாக அநுஸந்திக்கப்பட்டுள்ளது. "ப்ரத்யாதிசந்தி பவஸஞ்சரணம் ப்ரஜாநாம் பக்தாநுகந்துரிஹ, யஸ்ய கதாகதாநி" என்கிற ச்லோகம் ரஸவத்தரமானது. இதன் கருத்தாவது, யதோக்தகாரி யெம்பெருமான் பக்தனைப் பின் சென்றுபோவதும் வருவதுமான ஸஞ்சாரப்ரகாரத்தை யநுஸந்தித்தால் அஸ்மதாதிகளுக்கு ஸம்ஸார காந்தாரத்தில் நேரும் போவது வருவதான ஸஞ்சாரம் தொலையுமென்கை. அடுத்த ஏழாவது ச்லோகத்திலும் "ச்ரிதஜந பரதந்த்ரம்" என்பதனால் இவ்வைதிஹ்யம் ஸூசிதமாயிருக்கின்றது. ஸூசனையிருக்கட்டும். "பக்தாநுகந்து: கதாகதாநி" என்று ஸுஸ்பஷ்டமாகவன்றோ வுள்ளது. மஹா

மேதாவிகளான பூருவர்களுக்குத் தோன்றாத அநுபபத்திகளன்றோ இக்காலத்து விமர்சகர்களுக்குத் தோன்றுகின்றன. கண்ணழிவு சொல்லமுடியாத பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளிலும் இவர்கள் தெளியவில்லையென்றால் இவர்களைப்பற்றி 'ப்ராஹ்மாபி நரம் நரஞ்ஜயதி' என்னவேணுமத்தனை. ... ... ...

## இருமுப்பொழுதேத்தும் தொண்டர்

பெருமாள் திருமொழியில் ஏழாம் பாட்டில் "இரு முப்பொழுதேத்தி எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டர்" என்று குலசேகராழ்வாரருளிச்செய்திருப்பது பஞ்சகால பராயணர்களான பரமைகாந்திகளை; இப்பாட்டில் 'இரு முப்பொழுது' என்றது பஞ்சகாலமென்றபடி; இரண்டும் மூன்றும் கூடினால் ஐந்து; ஆகவே இருமுப்பொழுதேத்துமவர்கள் பஞ்சகால பராயணர்கள். இதனைச் சிறிது விவரிப்போம்.

ஞானத்திற் சிறந்தவர்களென்றும் அனுட்டானத்திற் சிறந்தவர்களென்றும் ஞானனுட்டானமிரண்டிலும் சிறந்தவர்களென்றும் மஹான்கள் கொண்டாடப்படுகிறார்கள். ஞானத்தில் சிறந்தவர்கள் பலர் கிடைக்கக்கூடும். அனுட்டானத்திற் சிறந்தவர்கள் பெரும்பாலும் அருமைப்பட்டே யிருப்பார்கள். அநுஷ்டாதாக்களான மஹான்கள் பஞ்சகாலபராயணர்களென்று போற்றப்படுகின்றார்கள்.

ஒரு தினத்தின் பகற்பொழுதை ப்ராத: காலம், ஸங்கவகாலம், மத்யாஹ்ந காலம், அபராஹ்ந காலம், ஸாயாஹ்ந காலம் என்று ஐந்தாகப் பகுத்து, ஸூர்யோதயம் முதல் அவ்வாறு நாழிகை இவற்றிற்கு முறையே உரியவையென்று வரையறுத்து, அபிகமநம், உபாதாநம், இஜ்யா, ஸ்வாத்யாயம், யோகம் என்ற ஐந்து ஒழுக்கங்களையும் முறையே (ப்ராத: காலம் முதலிய) அந்த ஐந்து சிறுபொழுதிலும் அநுஷ்டிக்கும்படி பஞ்சராத்ரம் முதலிய ஆகமங்கள் கூறும். இரவில் ஆசரிக்க வேண்டுவதும் யோகாநுஷ்டாநமே.

இவற்றின் விரிவு வருமாறு;—முதல் ஆறு நாழிகையாகிய ப்ராத: காலத்திலே ஸ்நாநம் ஸந்த்யாவந்தநம் ஜபம் முதலிய காலைக்கடன்களைச் செய்து முடித்துத் தாம் ஆராதிக்கவேண்டிய எம்பெருமானுடைய ஸந்நிதியிற் சென்று ப்ரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்ரம் முதலியவற்றால் எம்பெருமானை உகப்பிக்க வேண்டும். இஃது அபிகமந காலநியமம். அதற்கு அடுத்த ஸங்கவ காலத்திலே பகவதாராதனத்துக்கு வேண்டிய சுத்த தீர்த்தம், சந்தனம், புஷ்பம், தூபதீபத்ரவ்யங்கள் முதலியவற்றையும், திருமஞ்சனத்துக்கு வேண்டிய பால், தயிர், நெய், தேன் முதலியவற்றையும், எம்பெருமானுக்கு அமுது செய்விப்பதற்கு வேண்டிய அரிசி பருப்பு கறியமுது சர்க்கரை நெய் பழம் முதலிய போஜநோபகரணங்களையும் ஸம்பாதித்துத் தொகுத்து ஸித்தஞ் செய்யவேண்டும். இஃது உபாதாந காலநியமம். மூன்றாவதான மத்யாஹ்ந காலத்திலே மாத்யாஹ்நிகஸ்நாநமும் மாத்யாஹ்நிகச் சடங்குகளுஞ் செய்து விதிமுறை வழுவாது பகவானுக்குத் திருவாராதனம் பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுது செய்வித்து அங்ஙனம் நிவேதித்த உணவுகளை

அதிதிகளோடும் பந்து மித்திரர்களோடும் புஜிக்கவேண்டும்; இஃது இஜ்யா கால நியமம். அதற்கு அடுத்ததான அபராஹ்ந காலத்திலே மோக்ஷ மார்க்கத்திற்கு உரிய வேத வேதாந்த வேதாங்கங்களையும் இதிஹாஸ புராணங்களையும் மற்றும் உரிய நூல்களையும் தாம் கற்றலும் பிறர்க்குக் கற்பித்தலும்வேண்டும். இது ஸ்வாத்யாய கால நியமம். இனி, ஈற்றதான ஸாயங்காலத்திலே மாலைக்கடனாகிய ஸந்த்யாவந்தனத்தைச் செய்யத் தொடங்கி ஸூர்யாஸ்தமனமான பின்பு ஜபத்தைப் பூர்த்திசெய்து இரவு போஜநாநந்தரம் ஏகாந்தமாக விருந்து ஐம்பொறிகளை யடக்கி ப்ராணாயாமஞ் செய்து மனத்தைப் பரமாத்மாவினிடத்தே நிலைநிறுத்தி பகவத் குணாநுஸந்தானத்தோடு பள்ளிகொள்ளவேண்டும். இது யோக கால நியமம். இவ்வாறு அநுஷ்டிக்கும் சிஷ்டர்கள் பஞ்சகால பராயணர் எனப்படுவர்கள்.

இப்படி அனுஷ்டானங்களைச் செய்து கொண்டே போதைப் போக்கினால் ஞானத்தை அபிவிருத்தி செய்துகொள்ள பார்க்க மில்லாமற்போகும். ஜ்ஞாதாக்களுக்கு ஸ்வயம் விமர்சிக்க வேண்டிய விஷயங்கள் பலவுண்டு; பல துறைகளிலும் எழுதவேண்டிய நூல்களும் பல பலவுண்டு; திருவடிவாரத்தில் காத்திருக்கின்ற சிஷ்யர்களுக்குப் போதிக்க வேண்டியவைகளும் பலவுண்டு. பஞ்ச காலங்களில் ஸ்வாத்யாயகாலமென்று ஒதுக்கப்பட்ட ஓராறு நாழிகை யவகாசத்தில் என்னாகும்? ஞான மில்லாதவர்கள் இப்படிப்பட்ட அனுஷ்டானங்களினால் போதுபோக்கலாமே யொழிய வேதவேதாந்த வேதாங்கங்களில் விபுலமான ஞானம் படைத்தவர்கள் இங்ஙனே பஞ்சகால பராயணர்களாக இருக்க முடியுமோவென்று சிலர் சங்கிக்க நேரும். அது வேண்டா; ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்பட்ட அனுஷ்டானங்கள் ஆறு நாழிகை யவகாசத்தையும் ஆக்ரமிக்கக் கூடியவையல்ல, இடையிடையே ஞான விகாஸத்தைச் செய்துகொண்டுபோக இடையூறொன்றுமிராது. ...

## ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்வல்பவிசாரம் — ஸர்வாந்நாநுமத்யதிகரணம்

மூன்றுமத்யாயத்தின் கடைசி பாதத்திலுள்ள ஸர்வாந்நாநுமத்யதிகரணத்தைப்பற்றிக் கேண்மின்; இதற்கு முந்தின அதிகரணத்தில் ப்ரஹ்மவித்யா நிஷ்டனுக்கு சமம் ஆவச்யகமென்று சொல்லிற்று. போஜந நியமமாகிற சமவிசேஷம ப்ரஹ்மவித்துக்கு உண்டா இல்லையா? என்பதை விசாரித்து நிர்ணயிக்க இவ்வதிகரணம் தோன்றியது. '[ஸர்வாந்நாநுமதிச்ச ப்ராணாத்யயே தத்தர்சநாத்] என்பது ஸூத்ரம். (ச) சப்தமானது அவதாரணப்பொருளது. ப்ராணவித்யா நிஷ்டன் எந்த அன்னத்தையும் புஜிக்கலாமென்று அனுமதிப்பது ப்ராணாபத்தசையைப் பற்றியதேயாம்; ப்ரஹ்மவித்தான அதிகாரியின் விஷயத்தில் ப்ராணாபத் விஷயமாகவே காண்கையாலே—என்று ஸூத்ரார்த்தம். இங்குப் பூர்வபக்ஷம்: ச்சாந்தோக்யத்தில் ஐந்தாவது ப்ரபாடகத்தில் ப்ராண வித்யாப்ரகரணத்தில் "ந ஹ வா ஏவம்விதி கிஞ்சந அநந்நம் பவதி" என்று ஓதப்பட்டிருக்கிறது. ப்ராண வித்யா நிஷ்டனுக்கு அன்னமாகாதது எதுவுமில்லையென்று இதற்குப் பொருள். ப்ராண வித்யா நிஷ்டனுக்கு நிஷித்தாந்ந போஜனமும் ஸர்வதா கூடுமென்றும், வித்யா மாஹாத்மியத்தினால் இதில் தவறில்லையென்றும் சொல்லுவதாகத் தெரிகிறது.

அல்ப சக்திகனான ப்ராண வித்யா நிஷ்டனுக்கே நிஷித்தாந்ந போஜனம் அனுமதிக்கப்படுமானால் ப்ரஹ்ம வித்யா நிஷ்டனுக்கு அந்த அநுமதி கைமுதிக ந்யாய ஸித்தமே—என்று பூர்வபக்ஷம். இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு:-ப்ரஹ்ம வித்யா நிஷ்டனான உஷஸ்தன் ப்ராணாபத் தசையில் ஒரு யானைப்பாகன் உண்டு மிகுந்த காருமணியை புஜித்து அதனால் உயிர்தரிக்கப்பெற்றானென்றும், பிறகு அந்த யானைப்பாகன் கொடுத்த பானத்தை அவன் [உஷஸ்தன்] ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் ச்சாந்தோக்யத்தில் முதல் ப்ரபாடகத்தில் (கண்டம்-9) உஷஸ்த வ்ருத்தாந்த ப்ரகரணத்தில் காண்கிறது. இதனால், மஹா மஹிமசாலியான ப்ரஹ்ம வித்துக்கும் நிஷித்தாந்நபக்ஷணம் ஆபத்விஷயமென்று தெரிவதனாலும், ஆஹார சுத்தி ஆவச்யகமென்று தெரிவதாலும், ப்ராஹ்மண ஸாமாந்யத்திற்கும் ஆபத்காலத்தில் ஸர்வாந்நமும் அநுமதிக்கப் படுவதாகக் காண்கையாலும் ப்ரஹ்மவித்தான அதிகாரிவிசேஷத்திற்கும் ஸர்வாந்நாநுமதியானது ஆபத்கால மாத்ர விஷயகமென்று ஸித்திக்கும்போது, அல்பசக்தியான ப்ராணோபாஸகனுக்குக் காணும் ஸர்வாந்நாநுமதியும் ஆபத்விஷயகந்தானென்பதுபற்றிச் சொல்லவேணுமோ?

## ஸ்ரீ பாஷ்யத்திலேயே ஆவ்ருத்த்யதிகரணம்

நான்காவது அத்யாயத்தில் விஜ்ஞாபிக்கிறேன். பெரும்பாலும் உபாஸந பரமாகச் சென்றது மூன்றாமத்யாயம். உபாஸநத்தின் பலனை நிரூபிக்க அவதரிக்கின்றது நாலாமத்யாயம். இதில் முதலதிகரணம் ஆவ்ருத்த்யதிகரணம். மோக்ஷத்திற்கு உபாய பூதமான பகவதுபாஸநம் அஸக்ருதாவ்ருத்திரூபம் (அதாவது) தைலதாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தானரூபம், ஏனென்னில், "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" இத்யாதிகளில் விதிக்கப்பட்ட வேதநமானது அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தாநரூபத்யாநத்வாவஸ்தையையுடையதென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே—என்னும் பொருளதான ஸூத்ரம். [ஆவ்ருத்தி ரஸக்ருதுபதேசாத்] என்பது முதல் ஸூத்ரம். இங்கு பூர்வபக்ஷம்:—"ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத" இத்யாதிகளில் ஸ்வர்க்க ஸாதநமாக விதிக்கப்பட்ட யாகாதிகள் ஸக்ருத்கரணத்தாலேயே எப்படி ஸ்வர்க்காதி பல ஸாதநமாகிறதோ அப்படி இங்கும் "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" இத்யாதிகளில் மோக்ஷஸாதநமாக விதிக்கப்பட்ட பகவச்சிந்தாரூபமான வேதநமும் ஸக்ருதநுஷ்டாநத்தாலேயே மோக்ஷஸாதநமாகக் கூடுமாதலால் அது ஒருகாலே செய்யப்பட வேணுமென்று. இப்பூர்வபக்ஷத்தின்மேல் ஸித்தாந்தம் வருமாறு:-வேதாந்த சாஸ்த்ரங்களில் மோக்ஷஸாதநமானதைச் சொல்லுமிடங்களில் வேதநம், உபாஸநம், த்யாநம், த்ருவாநுஸ்ம்ருதி, ஸாக்ஷாத்காரம், பக்தி என்கிற சப்தங்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் பர்யாயபதங்களென்று நிச்சயிக்கப்படுமிடத்து தைலதாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதிஸந்தாந ரூபமானதென்றே அறுதியிட வேண்டியதாகிறது. "பக்த்யா த்வநந்யயா சக்ய: அஹமேவம் விதோர்ஜுந" இத்யாதி கீதா ச்லோகங்களும் இதையே வற்புறுத்துகின்றன. மேலே ஆறாவதாக ஆப்ரயாணாதிகரணமுள்ளது. "ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்" என்பது ஸூத்ரம். மோக்ஷஸாதநமான ப்ரஹ்மோபாஸநமானது மரணாந்தமாக அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று அதில் நிகமிக்கப்படுகின்றமையறிக.

| | |
|---|---|
| இராமாநுசன் | எம்பெருமானாரானவர், |
| தன்னை உற்றார் அன்றி தன்னை உற்றுரை குணம் சாற்றிடும் தன்மை உற்றார் இல்லை என்று அறிந்து | தம்மைப்பற்றி யிருப்பாருண்டேயொழிய தம்மைப் பற்றி யிருப்பவர்களுடைய குணகீர்த்தனம் பண்ணும் ஸ்வபக்த பக்தர்கள் ஒருவருமில்லை யென்று திருவுள்ளம்பற்றி |
| என்னை | அடியேனை |
| இன்று | இன்றையத்தினத்தில் |
| தன் தகவால் | தமது அருளாலே (என்ன செய்தாரென்றால்) |
| தன்னை உற்று ஆள் செய்யும் தன்மையினோர் | தம்மையடைந்து கைங்கரியம் பண்ணும் ஸ்வபாவமுடையவரான ஸ்வபக்தர்களுடைய |
| மன்னு தாமரைத் தாள் தன்னை உற்று ஆள் செய்ய | ஒன்றோடொன்று சேர்ந்த திருவடித் தாமரைகளை தான் அடைந்து ஆட் செய்யும்படி |
| உய்த்தான் | வைத்தருளினார். |

✻ ✻ ✻—எம்பெருமானார் என்னைத் தம்மிடத்து ஆட்படுத்திக்கொள்ளாமல் தம்மை அடுத்தவர்கள் பக்கல் என்னை ஆட்படுத்தினார். இதற்கு என்ன காரணமென்கிறீர்களோ? எல்லாரும் நம்மையே நேராகவந்து ஆச்ரயிப்பார் ஆருமில்லையே; இவ்வமுதனார், நம்மை ஆச்ரயித்தவர்களை ஆச்ரயிக்கிற அதிகாரியாக இருக்கட்டும்—என்று திருவுள்ளம்பற்றிச் செய்தார்.

இப்பாட்டின் அந்வயக்ரமம் சிறிது வருத்தப்படுத்தும்; ஜாகரூகராயிருந்து அந்வயித்துக்கொள்க;—தன்னையுற்றாரன்றித் தன்னையுற்றுரைக் குணம் சாற்றிடுந் தன்மையுற்றாரில்லை யென்றறிந்து, இராமாநுசன், தன்னையுற்றாட்செய்யுந் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள் தன்னையுற்று ஆட்செய்யத் தன் தகவால் இன்று என்னையுய்த்தான்—என்று அந்வயம்.

**சாற்றிடும்** என்கிற விசேஷணபதம் பாட்டின் முடிவில் வந்து நின்றது அபூர்வப் பிரயோகமென்பர். **என்னையுற்றான்**—என்று ஓதுவர்கள். ... 97

இடுமேயினிய சுவர்க்கத்தில்* இன்னம் நரகிலிட்டுச்
சுடுமேயவற்றைத் தொடர்தரு தொல்லை* சுழல்பிறப்பில்
நடுமேயினிநம் மிராமாநுசன் நம்மை நம்வசத்தே
விடுமேசரண மென்றால்* மனமேநையல் மேவுதற்கே. 98

| | |
|---|---|
| நம் இராமாநுசன் | நம் எம்பெருமானார். |
| சரணம் என்றால் | உமது திருவடிகளே சரணமென்று நாம் சொல்லிவிட்டோமானால் |
| இனி சுவர்க்கத்தில் இடுமே | (சிலர்க்கு) இனிதாகத் தோற்றுகிற ஸ்வர்க்கத்திலே நம்மைக்கொண்டு சேர்த்திடுவரோ? |
| இன்னம் | அல்லது |
| நரகில் இட்டு சுடுமே | நரகத்திலே கொண்டு தள்ளி தவிக்கச் செய்வரோ? |
| அவற்றை தொடர் தரு | அந்த ஸ்வர்க்க நரகங்களைத் தொடர்ந்து கிடக்கிற |
| தொல்லை சுழல் பிறப்பில் | அநாதியாயும் சுழன்று வருவதாயுமுள்ள ஜன்மத்திலே |
| நடுமே | நிறுத்துவரோ |
| இனி | மேலுள்ள காலங்களில் |
| நம்மை | தம்மை |
| நம் வசத்தே விடுமே | நாம போகிற வழியே விட்டு வைப்பரோ? (இவை செய்யமாட்டாரான பின்பு) |
| மனமே! | ஓ நெஞ்சே! |
| மேவுதற்கு | பேறு பெறும் விஷயமாக |
| நையல் | நீ கரையவேண்டா. |

✻ ✻ ✻—மனமே! இனி நீ ‘நமக்குப் பேறு கிடைக்குமோ கிடைக்காதோ?’ என்று அவ்விஷயத்தில் சிறிதும் கவலைப்படாதே. நாம் ‘ஸ்வர்க்கலோகம் போக நேருமோ? நரகம்போக நேருமோ? இந்த ஸம்ஸாரத்தில்தான் கிடந்து உழலும்படி நேருமோ?’ என்று சிந்தித்து இனி நீ வருந்தவேண்டா; ‘எம்பெருமானார் திருவடிகளே சரணம்’ என்று ஒரு தடவை சொல்லிவிட்டால் அந்த எம்பெரு

மானார் நம்மைக் கைவிடுவரோ? சிலநாளிருந்து இன்பம் நுகர்ந்து மீள்வதற் குறுப்பான சுவர்க்கத்திலே நம்மைக் கொண்டுபோகப் பார்த்திருப்பரோ? துன்பங் களையே அநுபவிப்பதற் கிடமான நரகத்திலே நம்மைக்கொண்டுபோய் ஹிம் ஸிக்கப் பார்த்திருப்பரோ? இன்பதுன்பங்களை மாறிமாறி அநுபவிப்பதற்கு இடமான இவ்விருள்தருமா ஞாலத்திலேதான் வைப்பரோ! இந்நிலத்தில் சிலநாள் நம்மை வைத்திருந்தாலும் தந்தலைவெட்டியாய் நம்மை வைத்திடுவரோ? பின்னை என் செய்வார்? தம்முடைய பாதங்களில் சேரும்படி தாமே அங்கீகரித்திடுவர்! அதற்காக நீ எள்ளளவும் கரையவேண்டா என்று தமது திருவுள்ளத்தை நோக் கிச் சொன்னாராயிற்று.

**அவற்றைத் தொடர்தரு தொல்லைச் சுழல்பிறப்பு**—சுவர்க்கம் போனாலும் நரகம் போனாலும் மாறிமாறிப் பலபிறப்பும் பிறக்க வேண்டுகையாலே ஸ்வர்க்க நரகங் களைத் தொடர்ந்தேயிருக்குமாம் பிறப்பு.

98

**நையல்**—முன்னிலை யெதிர்மறை வினைமுற்று.

**தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும்* தாழ்சடையோன்**
**சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும்* நான்மறையும்**
**நிற்கக் குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே**
**பொற்கற்பகம்* எம்மிராமாநுச முனி போந்தபின்னே.** 99

| | |
|---|---|
| தற்கம் சமணரும் | தர்க்கம் பண்ணுகிற சமணர்களும் |
| பேய் | பேய்ப்போலே பிடித்தபிடி விடாதே நிற்கிற |
| சாக்கியர்களும் | பௌத்தர்களும் |
| தாழ் சடையோன் சொல் கற்ற சோம்பரும் | ருத்ரனுடைய சொல்லாகிய சைவாகமத்தைக் கற்ற தாமஸர்களான சைவர்களும் |
| சூனிய வாதரும் | சூந்யவாதிகளும் |
| நால் மறையும் நிற்க | நான்கு வேதங்களும் விளங்கிக் கொண்டிருக்கச்செய்தே |
| குறும்பு செய் நீசரும் | (அவற்றுக்குச் சேராத) அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளும் |
| மாண்டனர் | ஒழிந்தார்கள் : |
| | (எப்போது? என்றால்) |
| பொன் கற்பகம் எம் இராமாநுச முனி | சிறந்த கல்ப வ்ருக்ஷம்போலே உதாரரான ஸ்வாமி எம்பெருமானார் |
| நீள் நிலத்தே போந்த பின் | விசாலமான இப்பூமியிலே திருவவதரித்த பின்பு |

***—ஸகலமான அர்த்தங்களையும் அளிக்கவல்ல எம்பெருமானார் இவ்வுல கத்தில் திருவவதரித்தபிறகு ஜைநர், பௌத்தர், சார்வாகர், பாசுபதர், அத்வைதி கள் முதலிய மதாந்தரஸ்தர்கள் எல்லாரும் மாண்டுபோனார்கள்; இனி அவர்களால் எவ்விதமான கெடுதியும் உலகத்துக்கு விளையமாட்டாது என்றாராயிற்று.

**சமணர்**—'ஆர்ஹதர்' என்று வழங்கப்படுகிற ஜிநமதத்தவர்கள். **சாக்கியர்**— புத்தமதத்தவர்கள்: இவர்கட்குக் கொண்டது விடாமையாகிற பிடிவாதம் அதிக மாகையாலே ''சாக்கியப் **பேய்களும்**'' என்றார். **சூனியவாதர்**—'ஸர்வம் சூந்யம்' என்று வாதிப்பவர்கள். ... ... ... ... 99

**போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு* உனதடிப்போதிலொண்சீ**
**ராந்தெளிதேனுண் டமர்ந்திட வேண்டி* நின்பாலதுவே**
**ஈந்திடவேண்டு மிராமாநுச இதுவன்றி யொன்றும்**
**மாந்தகில்லாது* இனி மற்றொன்றுகாட்டி மயக்கிடலே.** 100

| | |
|---|---|
| இராமாநுச | எம்பெருமானாரே! |
| என் நெஞ்சு என்னும் பொன் வண்டு | எனது நெஞ்சாகிற அழகிய வண்டானது |
| உனது அடி போதில் | தேவரீருடைய திருவடித் தாமரைகளில் |
| ஒண் சீர் ஆம் தெளி தேன் உண்டு அமர்ந்திட வேண்டி | அழகிய குணங்களாகிற தேனைப்பருகி நித்யவாஸம் பண்ண விரும்பி |
| நின் பால் | தேவரீரிடத்தில் |
| போந்தது | வந்து சேர்ந்தது: |
| அதுவே | அத்திருக்குணங்களையே |
| ஈந்திட வேண்டும் | அளித்தருள வேணும்; |
| இது அன்றி | இத்திருக்குணங்களைத் தவிர |
| ஒன்றும் | வேறொன்றையும் |
| மாந்தகில்லாது | (நெஞ்சு) புஜிக்க மாட்டாது; |
| இனி | இப்படியான பின்பு |
| மற்று ஒன்று காட்டி | வேறொரு விஷயத்தைக் காட்டி |
| மயக்கிடல் | மயக்க வேண்டா. |

***—ஸ்வாமிந்! அடியேனுடைய நெஞ்சு தேவரீருடைய திருக்குணங்களையே எப்போதும் அநுபவிக்க விருப்பங்கொண்டு மேல்விழுந்து தேவரீரிடம் வந்து சேர்ந்தது. இது இனி வேறொன்றை விரும்பாது; தேவரீரும் இனி இதை ஸம்ஸாரத்தில் போகவொட்டாமல் தேவரீரிடத்திலேயே நிலைநிறுத்திக் கொள்ள வேணும்.

தமது நெஞ்சை ஒரு வண்டாக ரூபணம் பண்ணினதற்கு ஏற்ப எம்பெருமானாருடைய திவ்யகுணங்களை மதுவாக ரூபணம் பண்ணினார். இந்த வண்டுக்கு அந்தத் தேன் தவிர வேறொன்றும் ரஸிக்கமாட்டாது.

மயக்கிடல்—முன்னிலை யெதிர்மறை வினைமுற்று. ... ... 100

**மயக்கு மிருவினை வல்லியிற்பூண்டு* மதிமயங்கித்**
**துயக்கும் பிறவியில் தோன்றியவென்னை* துயரகற்றி**
**உயக்கொண்டு நல்கு மிராமாநுசவென்ற துன்னை யுன்னி**
**நயக்குமவர்க் கிதிழுக்கென்பர்* நல்லவரென்று நைந்தே. 101**

| | |
|---|---|
| மயக்கும் | "அஜ்ஞானத்தை விளைக்க வல்ல |
| இரு வினை | புண்ய பாபமென்னும் இரு கருமங்களாகிற |
| வல்லியில் | விலங்கில் |
| பூண்டு | அகப்பட்டுக்கொண்டு |
| மதிமயங்கி | அறிவுகெட்டு |
| துயக்கும் | ப்ரமிக்கச் செய்கிற |
| பிறவியில் | ஸம்ஸாரத்திலே |
| தோன்றிய என்னை | பிறந்த அடியேனை |
| துயர் அகற்றி உயக்கொண்டு | துக்கங்களைப் போக்கி உஜ்ஜீவிக்கச்செய்து |
| நல்கும் | அருள்செய்கின்ற |
| இராமாநுச | எம்பெருமானாரே!" |
| என்றது இது | என்று தேவரீருடைய பாவநத்வத்தைப் பேசுகையாகிற இது |
| உன்னை உன்னி நைந்து | தேவரீரை அநுஸந்தித்து உருகி |
| என்றும் நயக்குமவர்க்கு | எப்போதும் ஆசையுடனிருப்பவர்களுக்கு |
| இழுக்கு என்பர் நல்லவர் | தகாதது என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள். |

***—எம்பெருமானார்க்கு, பாவநத்வம் என்றும் போக்யத்வம் என்றும் இரண்டு படிகள் உண்டு. பாவநத்வமாவது—பக்தர்களுடைய பாவங்களைப் போக்கிப் பரிசுத்தப்படுத்தல். போக்யத்மாவது எப்போதும் அநுபவிக்கக் கூடியவராயிருக்கை. இவ்விரண்டில் பாவநத்வத்தைவிட போக்யத்வமே சிறந்தது; ஏனென்றால், நம்முடைய பாவங்களைப் போக்கினாரென்கிற காரணத்தாலே நாம் அவரைப் **பாவநர்** என்று அநுஸந்திக்க வேண்டும்; இது ஒரு உபாதியைப்பற்றி வருவது. போக்யத்வத்தை அநுஸந்திப்பது இப்படிப்பட்டதல்ல. அது ஸ்வரூபப்ராயுக்தம் ஆகையாலே, பாவநத்வத்தை அநுஸந்திப்பதைவிட போக்யதையை அநுஸந்திப்

பதே சிறந்தது அப்படியிருக்க இவ்வமுதனார் இப்பிரபந்தத்தில் அடிக்கடி எம்பெருமானாருடைய பாவநத்வத்தை அநுஸந்தித்தார்; 'என்னுடைய பாவங்களையெல்லாம் போக்கினார், என்னுடைய குற்றங்களையெல்லாம் நீக்கினார்' என்று அடிக்கடி சொல்லியிருக்கிறார். அப்படி சொன்னதற்கு அநுதாபப்படுகிறார் இப்பாட்டில். போக்யதையில் ஈடுபட்டுப் பேசவேண்டியிருக்க, பாவநத்வத்தில் ஈடுபட்டமை தோற்றப் பேசினது பிசகு என்று பெரியோர்கள் சொல்லுவர்கள் என்றாராயிற்று. ... ... ... ... ... 101

நையும் மனமுன் குணங்களையுன்னி* என்னாவிருந்தெம்
ஐய னிராமாநுச னென்றழைக்கும்* அருவினையேன்
கையுந் தொழும் கண்கருதிடுங்காணக் கடல்புடைசூழ்
வையமிதனில்* உன்வண்மை யென்பாலென் வளர்ந்ததுவே. 102

| | | | |
|---|---|---|---|
| | (எம்பெருமானாரே !) | கையும் | கைகளும் |
| மனம் | எனது நெஞ்சானது | தொழும் | அஞ்ஜலிபண்ணுகின்றன ; |
| உன் குணங்களை உன்னி | தேவரீருடைய திருக்குணங்களைச் சிந்தித்து | கண் | கண்களானவை |
| நையும் | கரைகின்றது ; | காண கருதிடும் | (தேவரீரை) ஸேவிக்க ஆசைப்படுகின்றன; |
| என் நா | எனது வாக்கானது | கடல் புடை சூழ் வையம் இதனில் | சுற்றிலும் கடல் சூழப்பெற்ற இப்பூமண்டலத்தி னுள்ளே |
| இருந்து | நிலைநின்று | உன் வண்மை | தேவரீருடைய ஔதார்யகுணம் |
| எம் ஐயன் இராமாநுசன் என்று அழைக்கும் | எமக்கு ஸ்வாமியான எம்பெருமானாரே! என்று அழைக்கின்றது | என் பால் வளர்ந்தது என் | அடியேன்மீது (இவ்விதமாக) வளர்ந்ததற்குக் காரணம் யாதோ? |
| அரு வினையேன் | மஹாபாபியான என்னுடைய | | |

* * *—ஸ்வாமிந்! அடியேனுடைய நெஞ்சு தேவரீருடைய குணாநுபவத்தில் ஊன்றி 'இப்படியும் சில குணங்கள் இருப்பதே!' என்று உருகிப்போகின்றது. எனது நாவானது தேவரீருடைய திருநாம ஸங்கீர்த்தனத்தில் ஆழ்ந்துவிட்டது, எனது கைகள் தேவரீருக்கு அஞ்ஜலி பண்ணுவதில் ஆழ்ந்தன. கண்கள் தேவரீரை இப்போது ஸேவித்துக் கொண்டிருப்பதுபோலவே என்றைக்கும் ஸேவித்துக் கொண்டிருக்க ஆவல்கொண்டன. ஆக இப்படி எனது கரணங்களெல்லாம் தேவரீர்பக்கல் ஊன்றும்படி தேவரீருடைய வள்ளல்தனம் அடியேனொருவன்மீது ஏறிப்பாய்ந்தவிது சொல்லுந்தரமன்று—என்றாராயிற்று. ஐயன் இராமாநுசன்—அண்மைவிளி. முதல் வேற்றுமையாகவே கொண்டால், அழைக்கும் என்றது 'வ்யவஹரிக்கும்' என்றபடியாம். ... ... ... ... 102

வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய்* அன்று வாளவுணன்
கிளர்ந்தபொன்னாகம் கிழித்தவன்* கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடும்சிந்தை யிராமாநுச னென்றன் மெய்வினைநோய்
களைந்து நன்ஞானமளித்தனன்* கையில் கனியென்னவே. 103

| | | | |
|---|---|---|---|
| அன்று | முன்னொரு காலத்தில் | கிளர்ந்த | செருக்கினால் நெறித்திருந்த |
| வளர்ந்த வெம் கோபம் மடங்கல் ஒன்று ஆய் | கடூரமான கோபம் மேலிடப் பெற்ற ஒரு நரசிங்க மூர்த்தியாகி | பொன் ஆகம் | பொன்போன்ற மார்வை |
| | | கிழித்தவன் | கிழித்துப் பொகட்டவனான எம்பெருமானுடைய |
| வாள் அவுணன் | வாளையுடைய ஹிரண்யாஸுரனது | கீர்த்தி பயிர் எழுந்து | திருப்புகழ்களாகிற பயிர் வளர்ந்து |

| | | | |
|---|---|---|---|
| விளைந்திடும் சிந்தை | விளையப்பெற்ற திருவுள்ளத்தை யுடையரான | கையில் கனி என்ன | கையிலங்கு நெல்லிக் கனி போலே ஸுலபமாக |
| இராமாநுசன் | எம்பெருமானார் | | |
| என் தன் மெய் வினைநோய் களைந்து | எனது உடலைப்பற்றி யிருக்கிற வினைநோய்களையெல்லா மொழித்து | நல் ஞானம் அளித்தனன் | விலக்ஷணமான ஞானத்தைத் தந்தருளினார் |

***—கீழ்ப்பாட்டிற் சொன்னபடியே தம்முடைய கரணங்கள் எம்பெருமானார் விஷயத்தில் ஊன்றுகைக்குக் காரணம் என்னவென்று கேட்பார்க்கு விடை கூறுவதுபோலும் இப்பாட்டு. நரசிங்கவுருக்கொண்டு இரணியனுடலைப் பிளந்த பிரானுடைய திருக்கல்யாண குணங்களை எப்போதும் சிந்தித்துக்கொண்டிருக்கிற எம்பெருமானார் என் பாவங்களைப்போக்கி நல்லறிவை நல்கினார்; ஆகையால்தான் என்னுடைய கரணங்கள் அவர் பக்கலிலேயே ஆழங்காற்பட்டுவிட்டன — என்றாராயிற்று.

**மடங்கல்**—ஆண் சிங்கம். இரணியன் எம்பெருமானளவில் எவ்வளவு தீமை செய்திருந்தாலும் எம்பெருமானுக்குக் கோபம் உண்டாகாது; பரமபாகவதனான ப்ரஹ்லாதனளவில் அளவற்ற தீமைகள் புரிந்ததனால்* வளர்ந்த வெங்கோப மடங்கலொன்றாயினனென்க. **கீர்த்திப்பயிரெழுந்து விளைந்திடுஞ் சிந்தை**=பகவத் குணமாகிற பயிர் எம்பெருமானாருடைய திருவுள்ளமாகிற க்ஷேத்திரத்திலே சிறப்பாக விளைந்தோங்குமென்றது—எம்பெருமானாரைப்போல் பகவத் குணாநுபவம் பண்ணிக் களிப்பார் வேறு ஆருமில்லையென்றவாறு.

**கையிற்கனியென்னவே**=ஸ்பஷ்டமாக என்று கருத்து. "**கரதலாமலகம்**" என்பர் வடநூலாரும். ... ... ... ... ... 103

**கையில்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரினும்* உன்தன்**
**மெய்யிற்பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்* நிரயத்**
**தொய்யிற்கிடக்கிலும் சோதிவிண் சேரிலும் இவ்வருள்நீ**
**செய்யில்தரிப்பன்* இராமாநுச என்செழுங் கொண்டலே.** **104**

| | | | |
|---|---|---|---|
| செழு கொண்டல் | (ஔதார்யத்தில்) விலக்ஷணமான மேகம்போன்ற | நிரயம் தொய்யில் | ஸம்ஸார நரகக் குழியில் |
| என் இராமாநுசா | எம்பெருமானாரே! (தேவரீர்) | கிடக்கிலும் | அழுந்திக் கிடந்தேனாகிலும் |
| கண்ணனை | எம்பெருமானை | சோதி விண் சேரிலும் | சோதிமயமான பரம பதத்தை அடைந்தேனாகிலும் |
| கையில் கனி என்ன | உள்ளங்கை நெல்லிக் கனி போலே | இவ் அருள் | (தேவரீருடைய திருமேனியழகை அநுபவித் திருக்கைக்கு உறுப்பான) கிருபையை |
| காட்டி தரினும் | காட்டிக் கொடுத்தாலும் | நீ செய்யில் | தேவரீர் செய்தருளினால்தான் |
| உன் தன் மெய்யில் பிறங்கிய சீர் அன்றி யான் வேண்டிலன் | (தேவரீருடைய திருமேனியில் விளங்குகிற ஸௌந்தரியம் முதலிய குணங்களைத் தவிர வேறொன்றிலும் நான் கண் வைக்க மாட்டேன்; | தரிப்பன் | (ஸம்ஸாரத்திலோ மோக்ஷத்திலோ) கால்பாவி நிற்பேன் |

***—அடியேன் அபேக்ஷிப்பவற்றையெல்லாம் குறையறக் கொடுத்தருள்கின்ற ஸ்வாமீ!, தேவரீர் அடியேனுக்கு எம்பெருமானை ஸுலபமாகக் காட்டிக் கொடுத்தருளினாலும் தேவரீருடைய திருமேனியழகை அநுபவிப்பதில் அடியேனது நெஞ்சு ஊன்றி யிருக்குமேயொழிய அவ்வெம்பெருமானை விரும்பவே மாட்டாது. தேவரீருடைய திருமேனியின் அநுபவம் அடியேனுக்கு ஸித்திக்குமாகில் இவ்விருள் தருமா ஞாலத்தில் இருப்பும் எனக்குத் துயரை விளைக்கமாட்டாது. இவ்வநுபவம்

இல்லாவிடில் பரமபதமும் எனக்கு ஆநந்தத்தை விளைக்கமாட்டாது. இவ்வநுபவம் மாறாமல் ஸித்திக்கும் இடமே எனக்குப் பரமபோக்யமானது. அது ஸம்ஸார பூமியாகவும், நரகமாகவுமாம்; பரமபதமாகவுமாம். ஆகையால் அடியேனுக்கு தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹாநுபவமே இடைவிடாது செல்லும்படி அருள் புரியவேணுமென்று வேண்டினாராயிற்று.

நிரயத்தொய்யில்—நிரயமாவது நரகம். இந்த ஸம்ஸார நிலமே நரகமெனப் படும். தொய்யில்—சேறு எழனுருபு தொக்கிருக்கிறது தொய்யல் என்பாருமுளர்.

செழுந்திரைப் பாற்கடல் கண்டுயில்மாயன்* திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவுநன்ஞானி* நல்வேதியர்கள்
தொழுந்திருப் பாத னிராமாநுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத் தாடுமிடம்* அடியனேுக் கிருப்பிடமே. 105

| | | | |
|---|---|---|---|
| செழு திரை பால் கடல் | அழகிய அலைகளையுடைய திருப்பாற் கடலில் | நல் வேதியர்கள் தொழும் திரு பாதன் | நல்ல வைதிகர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடிகளை யுடையராயுமிருக்கிற |
| கண் துயில் | பள்ளிகொண்டிரா நின்ற | இராமாநுசனை | எம்பெருமானாரை |
| மாயன் | ஸர்வேச்வரனுடைய | தொழும் | ஸேவிக்கின்ற |
| திரு அடி கீழ் | திருவடிகளின் கீழே | பெரியோர் | மஹாத்மாக்கள் |
| விழுந்து இருப்பார் | விழுந்து கிடக்கும் மஹான்களுடைய | எழுந்து இரைத்து ஆடும் இடம் | உடம்பு இருந்த விடத்தில் இராமல் கிளர்ந்து கோஷித்துக்கொண்டு கூத்தாடும் இடம் |
| நெஞ்சில் மேவும் | ஹ்ருதயத்திலே பொருந்தி யெழுந்தருளி யிருக்கிற | அடியேனுக்கு இருப்பு இடம் | அடியேன் வஸிக்குமிடமாகும் |
| நல் ஞானி | சிறந்த ஞானியாயும் | | |

* * *—கீழ்ப்பாட்டில் "நிரயத் தொய்யில் கிடக்கிலும் சோதிவிண்சேரிலும்" என்று ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் வாசியற்றதாகச் சொன்ன அமுதனாரை நோக்கிச் சிலர், 'உலகத்தில் எல்லாரும் ஸம்ஸாரத்தை வெறுத்துப் பரமபதத்தை ஆசைப்படாநிற்க நீர் ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் துல்யமாகக் கருதிப் பேசுகின்றீரே, உமக்கு உத்தேச்யமான ஸ்தானம் எது? சொல்லும்! என்ன; ஸ்ரீ ராமாநுஜபக்தர்கள் களித்துக் கூத்தாடுகின்ற இடமே எனக்குப் பரமோத்தேச்யமான ஸ்தானம் என்கிறார்.

திருப்பாற்கடல் நாதனை ஸ்ரீமந்நாராயணனை அடிபணிந்தவர்களும் அவ்வெம்பெருமானை உபேக்ஷித்துவிட்டு எம்பெருமானாரையே நெஞ்சில் தியானிப்பர்களாம். அப்படிப்பட்ட எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள் எம்பெருமானாரை அநுபவித்ததனாலுண்டாகும் மகிழ்ச்சி தலைமண்டை கொள்ளப் பெற்று உடம்பு இருந்த விடத்திலிராதே கிளர்ந்து கடலிரைத்தாற்போலே இரைத்துக்கொண்டு தலைகால் தெரியாமல் எங்கெங்குக் கூத்தாடுவர்களோ அங்கங்கெல்லாம் அடியேன் உவந்து இருப்பேன்; அவ்விடமே எனக்கு முக்திஸ்தானம் என்றாராயிற்று. 105

[சாற்றுப் பாசுரங்கள்.]

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்* மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர்* அவைதன்னொடும் வந்
திருப்பிடம் மாய னிராமாநுசன் மனத்தின்றவன்வந்
திருப்பிடம்* என்ற னிதயத்துள்ளே தனக்கின்புறவே. 106

| | |
|---|---|
| மாயனுக்கு | ஸர்வேச்வரனுக்கு |
| இருப்பு இடம் | வாஸஸ்தானம் (எவை யென்றால்) |
| வைகுந்தம் | பரமபதமும் |
| வேங்கடம் | திருவேங்கடமலையும் |
| மாலிருஞ்சோலை என்னும் பொருப்பு இடம் | திருமாலிருஞ் சோலை யென்கிற திருமலையும் (ஆகிய இவையாம்) |
| என்பர் நல்லோர் | என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள். |
| மாயன் | (இவற்றை இருப்பிடமாகவுடைய) ஸர்வேச்வரன் |
| அவை தன்னொடும் வந்து இருப்பிடம் | அந்த ஸ்ரீவைகுண்டம் முதலியவற்றோடே கூட வந்து எழுந்தருளியிருப்பது |
| இராமாநுசன் மனத்து | எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலேயாம்; |
| அவன் | அவ்வெம்பெருமானார் தாம் |
| இன்று வந்து | இப்போது வந்து |
| தனக்கு இன்பு உற இருப்பிடம் | தமக்கு ஆநந்தமாக எழுந்தருளியிருப்பது |
| என் தன் இதயத்துள்ளே | அடியேனுடைய ஹ்ருதயத்திலுள்ளேயாம் |

* * *—கீழ்ப்பாட்டிற் கூறியபடியே அமுதனாருடைய எல்லை கடந்த ப்ராவண்யத்தை அறிந்த எம்பெருமானார் 'நம்மேல் இவ்வளவு காதல்கொண்டிருக்கிற இவருடைய நெஞ்சை நாம்விட்டு நீங்கலாகாது' என்று கொண்டு அமுதனாருடைய திருவுள்ளத்தை மிகவும் விரும்பியருள, அதனைக்கண்டு மகிழ்ந்து பேசுகிறார்.

எம்பெருமான் எங்கே எழுந்தருளியிருப்பனென்றால், ஸ்ரீவைகுண்டத்திலும் திருவேங்கடமலை திருமாலிருஞ்சோலைமலை முதலிய திவ்ய தேசங்களிலும் எழுந்தருளியிருப்பனென்று நல்லோர்கள் சொல்லுவர்கள். அப்படிப்பட்ட எம்பெருமான் அந்த ஸ்ரீவைகுண்டம் முதலிய இடங்களையும் சேர்த்துக்கொண்டு எம்பெருமானார் திருவுள்ளத்திலே வந்து நித்யவாஸம் பண்ணாநின்றான். அப்படிப்பட்ட எம்பெருமானார் என்னுடைய நெஞ்சத்திலே நித்யவாஸம் பண்ணாநின்றார்.

பெரிய திருவந்தாதியில், ''புவியுமிருவிசும்பும் நின்னகத்த. நீயென் செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய்—அவிவின்றி, யான் பெரியன் நீ பெரியை என்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியாயுள்ளு'' என்ற பாசுரம் இங்கே நினைக்கத்தகும். உபய விபூதி விசிஷ்டனான எம்பெருமான் உடையவர் திருவுள்ளத்திலே உள்ளான்; உபய விபூதி விசிஷ்டனைக் கபளீகரித்த அந்த உடையவரையும் அடியேன் கபளீகரித்தவன்—என்றதாகிறது. பொருப்பு—மலை. ... ... 106

**இன்புற்றசீலத் திராமாநுச* என்று மெவ்விடத்தும்**
**என்புற்றநோ யுடல்தோறும் பிறந்திறந்து* எண்ணரிய**
**துன்புற்று வீயினும்சொல்லுவ தொன்றுண்டுன் தொண்டர்கட்கே**
**அன்புற்றிருக்கும்படி* என்னையாக்கியங் காட்படுத்தே.** 107

| | |
|---|---|
| இன்பு உற்ற | ஆநந்த பூர்ணராயெழுந்தருளியிருக்கிற |
| சீலத்து இராமாநுச | ஸௌசீல்ய குணமுடைய எம்பெருமானாரே!, |
| சொல்லுவது ஒன்று உண்டு | தேவரீரிடத்தில் அடியேன் விஜ்ஞாபிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு; |
| | (அஃது என்னவென்றால்) |
| என்பு உற்ற நோய் உடல் தோறும் | எலும்பிலே உறைந்து நலியக்கூடிய வியாதிகளுக்கு இருப்பிடமான சரீரங்களிலெல்லாம் |
| பிறந்து இறந்து | பிறப்பதும் இறப்பதுமாகி |
| எண்ண அரிய துன்பு உற்று வீயினும் | எண்ணமுடியாத துன்பங்களையநுபவித்து முடிந்து போனாலும் |
| என்றும் | எல்லாக் காலங்களிலும் |
| எவ் இடத்தும் | எல்லாவிடங்களிலும் |
| உன் தொண்டர்கட்கே | தேவரீருடைய பக்தர்கள் விஷயத்திலேயே |
| அன்பு உற்று இருக்கும்படி என்னை ஆக்கி | பக்தனாயிருக்கும்படி அடியேனைச் செய்தருளி |
| அங்கு | அந்த பக்தர்களிடத்தில் |
| ஆள் படுத்து | (அடியேனை) ஆட்படுத்தியருளவேணும்; |
| | (இதுவே அடியேனுடைய வேண்டுகோள்.) |

***—கீழ்ப்பாட்டிற் கூறியபடியே தம்மிடத்தில் வ்யாமோஹங்கொண்டிருக்கிற எம்பெருமானாரை நோக்கி, 'ஸ்வாமிந்! தேவரீருக்கு அடியேன் விண்ணப்பம் செய்யவேண்டிய விஷயம் ஒன்றேயுள்ளது. அதாவது—பலவகை நோய்களுக்குக் கொள்கலமான சரீரத்தில் பிறப்பதும் இறப்பதுமாயிருந்துகொண்டு எவ்வளவோ துக்கங்களை அநுபவிக்கும்படியாக நேர்ந்தாலும் நேரட்டும்; எந்த நிலைமையிலும் அடியேன் தேவரீருடைய அந்தரங்க பக்தர்களுக்கே அடிமைசெய்யப் பெறுவேனாகில் அதுவே போதுமானது. ஆகையாலே அடியேனுக்கு வேறொன்றும் பிரார்த்திக்கத்தக்கதில்லை. எத்தனை பிறவிகள் நேர்ந்தாலும் அந்த நிலைமைகளில் அடியேனை தேவரீருடைய பக்தர்களுக்கே அடிமைப்படுத்தியருள வேணும்—என்பதொன்றையே பிரார்த்திக்கின்றேனென்றாராயிற்று. ... 107

**அங்கயல் பாய்வயல் தென்னரங்கன்* அணியாகமன்னும்**
**பங்கய மாமலர்ப் பாவையைப்போற்றுதும்* பத்தியெல்லாம்**
**தங்கியதென்னத் தழைத்துநெஞ்சே நந்தலைமிசையே**
**பொங்கிய கீர்த்தி* இராமாநுசனடிப் பூமன்னவே.** 108

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | ஓ மனமே! | | (நாம் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால்) |
| பத்தி எல்லாம் தங்கியது என்ன தழைத்து | பக்தியெல்லாம் நம்மிடத்திலே குடிகொண்டதென்று சொல்லும்படியாக வீறு பெற்று. | அம் கயல் பாய் வயல் தென் அரங்கன் | அழகிய கயல் மீன்கள் பாய்கிற கழனிகள் சூழ்ந்த தென்னரங்கத்தில் உறையும் எம்பெருமானுடைய |
| பொங்கிய கீர்த்தி இராமாநுசன் அடி பூ | பரந்த புகழை யுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகள் | அணி ஆகம் மன்னும் | அழகிய திருமார்பிலே நித்ய வாஸம் பண்ணுகிறவளாய் |
| | | பங்கயம் மா மலர் பாவையை | சிறந்த தாமரைப் பூவில் பிறந்த பதுமை போன்றவளான ஸ்ரீமஹாலக்ஷ்மியை |
| நம் தலை மிசையே மன்ன | நமது தலைமேலே நித்ய வாஸம் பண்ணும்படியாக, | போற்றுதும் | வாழ்த்துவோம். |

***—இப்பிரபந்தத்தின் தொடக்கத்தில் ''இராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ'' என்று எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளைப் பொருந்தி வாழ்வதே தமக்குப் பரம புருஷார்த்தமாக அருளிச்செய்தவராகையாலே அந்தப் புருஷார்த்தம் நமக்கு யாவஜ்ஜீவம் ஸித்திக்கும்படியாக—எல்லாச் செல்வங்களையும் அளிக்கவல்ல பெரியபிராட்டியாரைப் பிரார்த்திப்போமென்கிறார்—முடிவான இப்பாட்டில்.

பொங்கிய கீர்த்தியை யுடையரான இராமாநுசருடைய அடிப்பூ நம் தலைமிசையே மன்னுவதற்காகவும், பத்தியெல்லாம் தங்கியதென்னத்தழைத்து நிற்பதற்காகவும் பங்கயமாமலர்ப்பாவையைப் போற்றுவோமென்கிறார். எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளில் நமக்கு அளவற்ற பக்தி உண்டாவதற்கும், அத்திருவடிகள் நமக்குச் சிரோபூஷணமாவதற்கும் உறுப்பாகப் பிராட்டியை வேண்டிக்கொள்வோமென்கை. உலகத்தில் ஸாமாந்ய ஸம்பத்தை அளிக்கவல்ல பிராட்டியே இந்த விசேஷஸம்பத்தையும் அளிக்கக்கடவள் என்றதாயிற்று. 108

## இராமாநுச நூற்றந்தாதி — அடிவரவு

1. பூமன் கள்ளார் பேரிய லென்னை, எனக் கியலும் மொழி வருத்து மிறை மன் சீர்.
2. சீரிடம் செய்யும் கதி சோரா தாழ், முனி யெய்தற் குறு வாரப் பொழில் நிதி.
3. நிதி கார்த்தி வைப்பா மொய்த்த காரேய், திக்குத் கொள்ள நெஞ்சில் கூட்டு மின்ப மாண்டு.

4. ஆண்டு பொரு மடையார் நில நயவேன், அடல் படி யாக்கிப் பொருளும் சேம மண்.
5. மண் ஆயி சுரச் சொல்லார் பேறு, கூறு மிறை நிக ரான துதிப் படி.
6. அடி பார்த் தற்புதன் நாட்டி கண் கோக்குலம், மற்றொரு பேதையர் கடலுணர் கொழுந்து.
7. கொழு விருந்தேன் பிடியைப் பண்டரு வாழ் ஞானம், சரண மாறனைச் சிந்தை யென்னையும் சார்.
8. சார் கைத்த வண்மை தேர் செய்த்தலை நின்ற, ஈந்தனன் கருத்தில் பொய்யை நல் சோர்வி.
9. சோர் தெரிவுற்ற சீர் கண் டோதி பற்று, பெரியவர் கலிமிக்க போற்றரும் நினையார்
10. நினையார் மருள் புண்ணி கட்டத் தவ முன்னின், வளரும் தன்னையுற் றிடும் தற் போத்த.
11. போத்ததென் மயக்கும் நையும் வளர்ந்த, கையிற் செழுந்திரை யிருப் பின்பங்கயல்பூ.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் / பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த

## இராமாநுசநூற்றந்தாதி தீபிகையுரை

முற்றுப்பெற்றது.

இயற்பா உரை முற்றிற்று.

# காஞ்சீபுரம் P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளின் பதிப்பு நூல்களுக்குச் சுருக்கமான ஜாபிதா.

## நாலாயிர திவ்யப் பிரபந்த வுரைகள்.

### முதலாயிரத்திலுள்ள திவ்யப் பிரபந்தங்கள்

| | |
|---|---|
| திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி | 8—00 |
| திருப்பாவை (தீபிகையுரை) | 3—00 |
| ஷை நறுமணமென்கிற விசேஷார்த்த வுரை | 5—00 |
| நாச்சியார் திருமொழி | 4—00 |
| பெருமாள் திருமொழி | 4—00 |
| திருச்சந்தவிருத்தம் | 5—00 |
| திருமாலை, திருப்பள்ளியெழுச்சி. அமலனாதிபிரான், கண்ணிநுண்சிறுத்தாம்பு | 5—00 |
| திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி இவற்றுக்குப் பொழிப்புரை | 5—00 |

### பெரிய திருமொழியாயிரம்

| | |
|---|---|
| முதலிரண்டு பத்துக்கள் | 5—00 |
| மூன்று நான்கு ஐந்து பத்துக்கள் | 8—00 |
| ஆறு ஏழு எட்டு பத்துக்கள் | 8—00 |
| ஒன்பது பத்து பதினொரு பத்துக்கள் | 7—00 |
| திருக்குறு, நெடுந்தாண்டகம் | 3—00 |
| 1, 2, 3, 4 பத்துக்களுக்குப் பொழிப்புரை | 5—00 |

### மூன்ருவதாயிரம் இயற்பா

| | |
|---|---|
| ஒன்று இரண்டு திருவந்தாதிகள் | 5—00 |
| மூன்றுநான்முகன் திருவந்தாதிகள் | 5—00 |
| திருவிருத்தம் | 5—00 |
| திருவாசிரியம், பெரிய திருவந்தாதி | 4—00 |
| திருவெழுகூற்றிருக்கை, சிறிய பெரிய திருமடல்கள் இராமானுச நூற்றந்தாதி | 8—00 |
| இராமாநுச நூற்றந்தாதி உரை தனியாகவும் கிடைக்கும் | 4—00 |
| திருவாய்மொழியாயிரம் தீபிகை 10 வால்யம் | 42—00 |
| மூன்று வியாக்கியானங்களோடு கூடின பகவத்விஷயம் - புதிய பதிப்பு | 120—00 |
| பெரியாழ்வார் திருமொழிக்கு மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் | 10—00 |
| திருப்பாவைக்கு மூவாயிரப்படி ஆறுயிரப்படி வியாக்கியானங்கள் | 5—00 |
| திருநெடுந்தாண்டக வியாக்யானம் (பெரியவாச்சான் பிள்ளை) | 5—00 |
| முமுக்ஷுப்படி தத்வத்ரயம் ஸ்ரீவசன பூஷணம் ஆசார்ய ஹ்ருதயம் இவற்றுக்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் | 25—00 |
| அவற்றின் பிரமாணத் திரட்டு | 5—00 |
| ஷை நான்கு ரஹஸ்யங்களும் P. B. அண்ணங்கராசாரியர் எழுதிய தாத்பர்ய ஸாரார்த்த தீபிகை | 12—00 |
| ஆளவந்தார் ஸ்தோத்ரம் முதல் பஞ்சஸ்தவ ஸ்ரீரங்கராஜஸ்தவாதிகள் உட்பட ஸகல ஸ்தோத்ரங்களுக்கும் P. B. A. ஸ்வாமிகள் எழுதிய விளக்கவுரைகள் | 40—00 |
| நித்யாநுஸந்தானம் P. B. A. உரையுடன் | 15—00 |
| ஆழ்வார்களுடையவும் ஸகல ஆசாரியர்களினுடையவும் வைபவங்கள் (மணவாள மாமுனிகள் வைபவம்வரை) | 6—00 |
| P. B. A. ஸ்வாமிகளின் உபந்யாஸ நூல்கள் 16 | 16—00 |

மற்றும் பலவகை நூல்களுக்கு விரிவான கியாடலாக் தருவித்துப் பார்க்க.

## P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் நூல் துறைகள்.

1. நாலாயிர திவ்யப்பிரபந்த வுரைகள்
2. பூர்வாசார்ய தமிழ்ப்பிரபந்த ,,
3. ஸகல பூர்வாசார்ய ஸ்தோத்ர ,,
4. ஆழ்வாராசார்யப் பிரபாவ நூல்கள்,
5. இதிஹாஸ புராண சரித்திர ,,
6. ரஹஸ்யார்த்த விளக்க ,,
7. வேதாந்தப் பொருள் விளக்க ,,
8. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க ,,
9. வேதவிசாரலக்ஷண நூல்கள்
10. லோகாபிராம உபன்யாஸ நூல்கள்
11. பரபக்ஷப்ரதிக்ஷேப நூல்கள்
12. உபந்யாஸக ஸௌபாக்ய நூல்கள்
13. வடமொழி நூல் திரள்கள்,
14. ஹிந்தீ பாஷையில் நூல்கள்
15. தெலுங்கு பாஷையில் ,,
16. பூர்வாசார்ய க்ரந்த வெளியீடுகள்

விரிவான கியாடலாகுகள் தருவித்து விவரங்காண்க.

சந்தாப்பணம் M. O. செய்பவர்கள்
P. B. ANNANGARACHARYA.
*Editor*, GRANTHAMALA, Kancheepuram-631503
என்ற விலாசத்திற்கு அனுப்புக.

If un-delivered please return to:
P. B. ANNANGARACHARYA,
Kanchipuram. Pin Code-631503.



To
Sriman/Srimathi

6. Sri A.K.Rajagopalacharya,
3, Nathamuni Street,
T.Nagar, MADRAS-600017.

Ai-17

Edited and Published by P. B Annangaracharya Swami
for Madras Sathgrantha Prakasana Sabha.
Printed by E. Devarajan at Sri Kamakshi Press.
44-c, Thirukatchinambi Street, Kancheepuram-631503.